பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆனி 29 செவ்வாய்க்கிழமை [13-07-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 196

# வன்னிக்கான பாதை 5 சதுர கிலோ மீற்றர் யுத்த சூனியப் பகுதி!

## இராணுவத் தரப்பு கோருகின்றது

கொழும்பு, ஜூலை 13

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் கட்டுப் பாடற்ற பிரதேசத்துக்கும் இடையில் தரை வழிப் போக்குவரத்துப்பாதை ஒன்றை மாங்குளம் பகுதியில் திறப்பதாயின் அதற்காக அங்கு சுமார் ஐந்து சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணமுள்ள பிரதேசம் யுத்த சூனியப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படவேண்டும்; அதற்கு விடுதலைப் புலிகள் இணங்கவேண்டும்.

— இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவத்தரப்பு அறிவித்திருக்கின்றது.

மேற்படி பாதை திறப்பது தொடர்பாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பேச்சு நடத்தியதும்—

மாங்குளம் பகுதி ஊடாக அத்தகைய பாதை ஒன்றைத் திறப்பதற்கு பூர்வாங்கப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டதும் — தெரிந்தவையே.

தெற்கிலிருந்து பொருள்களை ஏற்றி வரும் லொறிகள், அவற்றை இறக்கி மறு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதை திறக்கக் கோரி பயணிகள் நேற்று மறியல்

### வவுனியா செயலகம் முன்பாக

வவுனியா, ஜூலை 13

வன்னியில் இராணுவக்கட்டுப் பாட்டில் இல்லாத பகுதிகளில் இருந்து பல்வேறு தேவைகளின் நிமித்தம் வவுனியாவுக்கு வந்து சிக்குண்டுள்ள சுமார் 2 ஆயிரம் பேர் நேற்று வவுனியா செயலகம் முன்பாக மறியலில் ஈடுபட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல போக்குவரத்துப் பாதை ஒன்றை உடனடியாகத் திறக்குமாறு கோரியே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடைசியாக பாப்பாமோட்டைப் பாதை வழியாக மன்னாருக்கும் வவுனியாவுக்கும் வந்துசேர்ந்த இவர்கள் அப்பாதை மூடப்பட்டதை அடுத்து திரும்பிச் செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

செலவுக்கு பண வசதியின்றியும் தமது அலுவல்களை

(10 ஆம் பக்கம் பார்க்க)

### ஊடுருவலைக் கண்காணிக்க

## வவுணதீவுக்கு மேற்கே படை நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 13

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவுக்கு மேற்கே மட்டுப்படுத்தப்பட்ட கண்காணிப்புப் படைநடவடிக்கை ஒன்று இடம்பெறுவதாகக் கிழக்கு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றும் நேற்று முன்தினமும் வவுணதீவில் இருந்து குறிஞ்சாமுனை, காயாமடு, கன்னங்குடா வரை— சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் வரை படையினர் முன்னேறிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை கன்னங்குடாப் பகுதியில் வைத்து படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தி உள்ளனர். ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. அன்றைய தினம் முன்னேறிச் சென்ற படையினர் மாலையானதும் மீண்டும் வவுணதீவுக்குத் திரும்பிவிட்டனர். மீண்டும் நேற்றுக் காலை இதேபகுதிகள் ஊடாக படையினர் முன்னேறிச் சென்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாயில் குண்டு வெடிப்பு

மானிப்பாய், ஜூலை 13

மானிப்பாய்ப் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

வலி தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபைப் பணிமனைக்கு அருகே இக்குண்டு வெடித்தது.

இதனால் எவருக்கும் காயம்

(10 ஆம் பக்கம் பார்க்க]

## வேப்பங்குளத்தில் 10 பேர் கைது

வவுனியா, ஜூலை 13

வவுனியா வேப்பங்குளம் நலன்புரி நிலையம் நேற்றுக் காலை படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு அங்கு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. பலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். விசாரணைகளின் முடிவில் 10 பேர் வரை கைது செய்யப்பட்டதாக வவுனியாத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ-164)

# கொக்குத்தொடுவாயில் நேற்று புலிகள் தாக்கி 8 படையினர் பலி!

கொழும்பு, ஜூலை 13

மணலாறு கொக்குத்தொடுவாய் பகுதியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் எட்டுப் படையினர் கொல்லப்பட்டனர்; ஐவர் படுகாயமடைந்தனர்.

கொக்குத்தொடுவாயில் இருந்து ஜானகபுர முகாமுக்கு ரோந்து சென்றுகொண்டிருந்த படையினரை வழிமறித்துப் புலிகள் இத்தாக்குதலை நடத்தினர்.

ஏழு படையினர் அந்த இடத்திலேயே பலியானதாகவும் ஒருவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் உயிரிழந்ததாகவும்—

பலத்த காயங்களுடன் அங்கு அனுமதிக்கப்பட்ட ஐவரில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார்கள் மற்றும் றொக்கெற் மூலம் புலிகள் இத்தாக்குதலை நடத்தியதாகவும் படையினர் நடத்திய பதில் தாக்குதலில் புலிகளுக்குப் பலத்த சேதங்கள் ஏற்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை—

இத் தாக்குதலின் போது தமது தரப்பில் இழப்புகள் ஏற்படவில்லை என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

படையினரிடம் இருந்து ஏ. கே. எல். எம். ஜீ. துப்பாக்கி ஒன்றையும் மூன்று ரீ-56 ரகத் துப்பாக்கிகளையும் ரீ-56-11 ரகத் துப்பாக்கிகள் இரண்டு மற்றும் தொலைத் தொடர்பு சாதனம் என்பனவற்றைத் தாங்கள் கைப்பற்றியதாக—புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

இதேவேளை—

கொக்குத் தொடுவாய் படைமுகாமின் முன்னணிக் காவலரண்கள் மீது நேற்று முன்தினம் இரவு 9. 30 மணியளவில் புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். படையினரின் நான்கு முன்னணிக் காவலரண்கள் இத்தாக்குதலில் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-164-21)

## 'ரமோனா' பயணிகள் படகை பொறியியலாளர் பரிசோதிப்பர்

### அதன் பின்னரே சேவைக்கு அனுமதி

மன்னார், ஜூலை 13

மன்னாருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையே சேவையில் ஈடுபடவுள்ள 'ரமோனா' படகு பொறியியலாளர்களால் பரிசோதிக்கப்பட உள்ளது.

இந்தப்படகு பொதுமக்கள் பயணம் செய்வதற்கு உகந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடுருவல்காரர் வெளியேற வெள்ளி வரை அவகாசம்

### இந்தியா அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 13

காஷ்மீரில் இந்திய எல்லைப் பகுதிக்குள் ஊடுருவியுள்ள தீவிரவாதிகள் அங்கிருந்து வெளியேறுவதற்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை வரை அவகாசம் வழங்கப்பட்டிருப்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

ஊடுருவல்காரர்கள் வெளியேறுவதற்கான அறிகுறிகள் தெரிவதை அடுத்து இந்தியப் படைகளின் தாக்குதல் நடவடிக்கைகளில் சிலவற்றை இடைநிறுத்தியுள்ளதாக இந்தியா தெரிவித்திருக்கிறது.

வெள்ளிக்கிழமை காலைக்குள் பாகிஸ்தானியப் படைகளும், ஊடுருவல்காரர்களும் முற்றாக வெளியேறாவிடில் மீண்டும் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்).

### மன்னார் பள்ளிமுனையில் பயங்கரம்

## முகமூடி அணிந்து வந்த ஐவரால் இளம் பெண் சுட்டுக் கொலை!

மன்னார், ஜூலை 13

மன்னார் பள்ளிமுனையில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இளம்பெண் ஒருவர் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கமலித்தா லைலா (வயது 21) என்ற இளம்பெண்ணே கொல்லப்பட்டவராவர்.

அவரது வீட்டுக்குச் சென்ற முகமூடிஅணிந்த ஆயுதபாணிகள் ஐவர் முதலில் அவரது சகோதரனை விசாரித்துவிட்டு தாயாரைத் தாக்க முற்பட்டனர் என்றும்—

அவர்களது பிடியில் இருந்து தப்பிய தாயார் வீட்டுக்கு வெளியே சென்று பொலீஸ் நிலையம் நோக்கி ஓடிய

(10 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தம்பு வைத்திலிங்கம்

உடுவில், சிங்கம் ஒழுங்கையைச் சேர்ந்த தம்பு— வைத்திலிங்கம் 07-07-1999 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், பொன்னம்மாவின் அன்புச் சகோதரனும், புஸ்பராணி, குபேந்திரராணி, அருள்பாஸ்கரன் (கனடா), ஜெகபாஸ்கரன் (கனடா), சந்திரிக்கா ஆகியோரின் தகப்பனும், குலசிங்கம், இந்திரகுமார் (சவூதி), சண்முகம், லிங்காதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், தனு, தயா, பிரசாந், தர்ஷன், விதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-07-1999) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
மனைவி, பிள்ளைகள்.

உடுவில். (67389)

## வைத்திலிங்கம் நாகேஸ்
(ஆசாரி)

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். / கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் நாகேஸ் (ஆசாரி) அவர்கள் 12-07-99 இல் காலமாகிவிட்டார். இவர் கலைச்செல்வன், அனுசியா ஆகியோரின் அன்புத் தந்தையும் விநோதன் (நித்தி), வனிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜீவனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-7-99) செவ்வாய்க்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்

கட்டைப்பிராய்,
யாழ்ப்பாணம். (67409)

## திருமதி அலிஸ் சறோஜினி நீக்கிலஸ்

யாழ். வேம்படி வீதி, 25 ஆம் இலக்கத்தில் வசித்தவரும் பின்னர் ரொறன்ரோ, கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி அலிஸ் சறோஜினி நீக்கிலஸ் அவர்கள் 9—07—99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி அ. சுவாம்பிள்ளை அவர்களின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற விக்ரர் நீக்கிலஸின் அன்பு மனைவியும், விஜிதா, மனோ, வினோ, மறியா, மாத்தா, யூட் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சிறில், மட்டுநகர் — திருமலை ஆயர். அதிவண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 14 — 07 — 99 புதன்கிழமை கனடாவில் இடம்பெற இருப்பதால் அன்று மாலை 5.00 மணிக்கு யாழ். புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அருள்திரு. J. P. E. செல்வராசா
(குரு முதல்வர்)

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம். (67401)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## வெளிவாரிப் பரீட்சைகள் 1997/ 1998

முதற் கலைத்தேர்வு- 1998
முதல்வணிகத்தேர்வு- 1998
இசைமாணி
முதலாண்டுத் தேர்வு- 1998
நடனமாணி
முதலாண்டுத் தேர்வு- 1998

மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர் யாழ் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் 15 ரூபாவைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை எமது அலுவலகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளவும்.

வவுனியா வளாகத்தில் பரீட்சை எழுத விரும்புவோர் அங்கு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து வளாகத்தில் சமர்ப்பிக்கலாம். இம்முறை மன்னாரிலும் முதற் கலைத்தேர்வு, முதல் வணிகத் தேர்வு - 1998 பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

இசைமாணி, நடனமாணி முதலாண்டுத்தேர்வுகள் யாழ். பல்கலைக்கழகத்தில் மட்டுமே நடத்தப்படும்.

மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் நடத்தப்படும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த விண்ணப்பங்கள் யாவும் 27-07-99 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.
12-07-1999
(சி/8166)

---

# கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் கிழக்கு

## சின்னத்தம்பி இராசரெட்ணம்
(கனடா)

எமது ஆலய பரிபாலன சபைத் தலைவர்

அவர்கள் இயற்கையெய்தியமையையிட்டு அவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், மைத்துனர் அனைவருக்கும் எமது கற்பகவிநாயகர் ஆலய சபை சார்பாக அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை, தொண்டர் சபை
ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயம்,
உரும்பிராய்.
(67398)

# மரண அறிவித்தல்

## திருமதி குமாரசிங்கம் சொறணம்மா
(இராசாத்தி அம்மா)

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி குமாரசிங்கம் சொறணம்மா 12-07-99 திங்களன்று காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் குமாரசிங்கம் (P W D Engineer, Malaysia) அவர்களின் மனைவியும் காலஞ்சென்ற வல்லிபுரநாதன் (M O H. Office, Manipay), குருநாதன் (கஜன்ஸ் வாச்வேக்ஸ், யாழ்ப்பாணம்), நல்லைநாதன் (Retired Surveyor), யதார்த்தநாதன் (Retired Store Keeper, N, Vaithilinham & Co Ltd, Colombo), காலஞ்சென்ற கமலாதேவி, சறோஜினிதேவி (முன்னாள் Singer Machine Co, Colombo) அவர்களின் தாயாரும் கதிர்காமநாதன் (Retired Manager, Peoples Bank, Jaffna), காலஞ்சென்ற குணமணி, விஜயலட்சுமி, வசந்தமாலா, இரத்தினேஸ்வரி (சைவ மங்கையர் கழகம், கொழும்பு) ஆகியோரின் மாமியாரும், ஜமுனா (U,K), ஜீவகன் (U.K), பார்த்தீபன் (Singapore), பிரதாபன் (University Peradeniya), பிரதீபன் (Colombo Hindu College), வாசுகி (Singapore), ரானதி (Colombo), ஜெபந்தன் (Colombo University) ஆகியோரின் பேர்த்தியாரும் ஜீவனாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கு. யதார்த்தநாதன் (குழந்தை)
(மகன்)

பொற்பதி றோட்,
கோண்டாவில் கிழக்கு. (6406)

---

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தமிழினத்தின் தலைவரும் இலங்கை நாடாளுமன்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான

அமரர்
## நாவலர் அ. அமிர்தலிங்கம்
அவர்களுக்கும்

முன்னாள் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்

அமரர்
## வெ. யோகேஸ்வரன்
அவர்களுக்கும்

எமது நினைவஞ்சலிகள்

அன்னாா்களது நினைவு தினத்தை முன்னிட்டு இன்று (13-7-99) காலை 10.00 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். தலைமைச் செயலகத்தில் அவர்களது திருவுருவப் படங்களுக்கு மலரஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி

(சி/8168)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். ஊடுருவல்காரர்கள் வாபஸ் பெறுவது ஆரம்பம்

## இந்தியாவின் தாக்குதல் நிறுத்தம்

ஸ்ரீநகர், ஜூலை 13

ஜம்மு — காஷ்மீர் மாநிலத்தில் இந்திய எல்லைப் பிரதேசத்தில் ஊடுருவியிருந்த பாகிஸ்தான் படையினரும் தீவிரவாதிகளும் அங்கிருந்து விலகும் பணியை ஆரம்பித்துள்ளனர் என்று பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் சர்தார் அஸீஸ் அறிவித்துள்ளார்.

இந்தப் படை விலகலை இந்திய அதிகாரிகளும் உறுதி செய்துள்ளனர்.

இந்திய எல்லைக்குள் ஊடுருவியிருந்த பாகிஸ்தான் படையினரையும், தீவிரவாதிகளையும் விரட்டும் வகையில் இந்தியா பெரிய அளவில் விமானம் மற்றும் தரைத் தாக்குதல்களை ஆரம்பித்திருந்தது.

அமெரிக்க அதிபருக்கும் பாகிஸ்தான் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாடு காரணமாகவும் —

பிரிட்டன், ஜேர்மன் போன்ற நாடுகள் பிரயோகித்த அழுத்தம் காரணமாகவும் — ஊடுருவியிருந்தவர்களை விலக்கும் பணியை பாகிஸ்தான் ஆரம்பித்துள்ளது.

ஊடுருவியுள்ளவர்களை திரும்பிச் செல்லுமாறு பாகிஸ்தான் கோரியுள்ள போதும், அவர்கள் எங்கே செல்கின்றார்கள் என்ற விவரத்தை வெளியிட பாகிஸ்தான் மறுத்துவிட்டது.

அதே சமயம் பாகிஸ்தான் — இந்தியா ஆகிய நாடுகளின் இராணுவ நடவடிக்கைத் தலைமையக அதிகாரிகள் நேற்று முன்தினம் பிற்பகல் பஞ்சாப் எல்லைப் பகுதியில் உள்ள முகாம் ஒன்றில் சந்தித்தனர்.

அந்தச் சந்திப்பின் போது படைகளை விலக்குவது தொடர்பான தமது முடிவை பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுமுகமான முறையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பை அடுத்து இந்தியா தனது விமான மற்றும் தரைத் தாக்குதலை இடைநிறுத்தியுள்ளது.

ஊடுருவியிருந்த படையினர் விலகுவதை அவதானிக்க முடிகின்றது என்றும் —

ஒரு வாரத்தில் இந்தப் பணி முடிவடையலாம் என்றும் — பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் மிஸ்ரா தெரிவித்தார்.

இந்திய மண்ணில் இருந்து கடைசி ஊடுருவல்காரர் விலகிய பின்பே இந்தியாவின் இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படும் என்றும் —

அதுவரை படையினர் அங்கு தயார் நிலையிலேயே இருப்பர் என்றும் — இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

படைகள் வாபஸ் பெறுவதால் வீணான உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் வகையிலேயே அவர்களைத் தாக்குவதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது. (இ-3)

## இன்னும் 25 ஆண்டுகளில் சனத்தொகை 800 கோடி

நியூயோர்க், ஜூலை 13

அடுத்த 25 வருட காலத்தில் உலக சனத்தொகை 800 கோடியைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுவதாக ஐ. நா. சனத்தொகைக் கணக்கீட்டுப்பிரிவு தெரிவித்துள்ளது.

1804 ஆம் ஆண்டு நூறு கோடியாக இருந்த உலக சனத்தொகை 1927 ஆம் ஆண்டு 200 கோடியாக உயர்ந்தது என்றும் —

தற்சமயம் 600 கோடியாக உள்ள சனத்தொகை 2025 ஆம் ஆண்டில் 800 கோடியாக உயரும் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய நாடுகளிலேயே சனத்தொகை அதிகரித்துள்ளது என்றும் —

சீனாவின் சனத்தொகை 125 கோடியாகவும் —

இந்தியாவின் சனத்தொகை நூறு கோடியாகவும் — உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் உலக சனத்தொகை தினமாகும். இதனை முன்னிட்டே ஐ. நா. இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. [இ-3]

## வாக்களிக்கும் பெண்கள் முக்காடு கழற்ற வேண்டும்

அம்மான், ஜூலை 13

ஜோர்டான் தலைநகர் அம்மானில் தேர்தலில் வாக்களிக்கச் செல்லும் பெண்கள் தங்கள் முக்காட்டைக் கழற்றி தாங்கள் பெண்கள் என்பதை உறுதி செய்யவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நடந்த மாநகரசபைத் தேர்தலில் பல ஆண்கள் பெண்களைப் போன்று முக்காடு இட்டு வாக்களிப்பில் மோசடி செய்தமை கண்டு பிடிக்கப்பட்டிருந்தது,

இதை அடுத்து இந்த முறைத் தேர்தலில் பெண்கள் முக்காடுகளைக் கழற்றிக் காட்டவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## ஜனதா தள்- அ.தி.மு.க. கூட்டணி அமைக்க முடிவு

சென்னை, ஜூலை 13

எதிர்வரும் தேர்தலில் அ. தி. மு. கவும் ஜனதா தள்ளும் தேர்தல் கூட்டணி அமைக்க கொள்கை அளவில் இணங்கிவிட்டன என்று ஜனதாதள் மூத்த தலைவரும், முன்னாள் பிரதமருமான தேவகௌடா தெரிவித்துள்ளார்.

இரு கட்சிகளுக்கும் இடையிலான தொகுதிப் பங்கீடு குறித்து மாதமுடிவில் இணக்கம் காணப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம் — சோனியாகாந்தி தலைமையில் மதச்சார்பற்ற கூட்டணி ஒன்றை அமைக்கவேண்டும் என்றும் —

அவரைப் பிரதமர் பதவிக்கு நிறுத்தவேண்டும் என்றும் — புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் மூன்று கூட்டணிகள் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு உள்ளது என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

பாரதீய ஜனதா— தி. மு. க. சார்புக் கூட்டணியும், காங்கிரஸ் — இடது சாரிக்கட்சிகள் இணைந்த கூட்டணியும் அ. தி. மு. க — ஜனதாதள் இணைந்த கூட்டணியும் அமைக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது. [இ-3]

## பின்லேடனை விசாரணைக்கு அனுப்ப தலிபான் மறுப்பு

காபூல், ஜூலை 13

சவூதிக் கோடீஸ்வரர் ஒஸாமா பின்லேடனை விசாரணைக்காக அமெரிக்காவுக்கு அனுப்ப ஆப்கானிஸ்தானிலுள்ள தலிபான் அரசு மறுத்து விட்டது.

கடந்த ஆண்டு தன்சானியாவிலும் கென்யாவிலும் உள்ள அமெரிக்கத் தூதரகங்களில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களின் சூத்திரதாரி பின்லேடன்தான் என அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது.

குண்டு வெடிப்புச் சம்பவங்களில் ஒஸாமா பின்லேடன் சம்பந்தப்பட்டுள்ளார் என்பதை அமெரிக்கா ஆதாரங்களுடன் நிரூபிக்கவில்லை என்றும்—

குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை விசாரணைக்காக நாடு கடத்துவதற்கான ஒப்பந்தம் வாஷிங்ரனுடன் செய்தி கொள்ளப்படவில்லை என்றும் — தலிபான் அமைப்பின் தலைமைச் செய்தியாளர் கூறியுள்ளார்,

பின்லேடன் தனது குடும்பத்தவருடன் ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புடன் வாழ்ந்து வருகிறார் எனக்குறிப்பிட்ட செய்தியாளர் அவர் எங்கு இருக்கிறார் என்பதைத் தெரிவிக்கவில்லை.

பின்லேடனைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்கா ஆப்கானிஸ்தான் அரசைக் கேட்டிருந்தது தெரிந்ததே. [இ-க]

## உலக அரங்கில்

### நில நடுக்கம்

நியூயோர்க், ஜூலை 13

மத்திய அமெரிக்காவின் பல இடங்களிலும் நேற்று முன்தினம் நில நடுக்கம் ஏற்பட்டது.

உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

### ஈரானில் பொலீஸ் அதிகாரி பதவி நீக்கம்

தெஹ்ரான், ஜூலை 13

ஈரான் அதிபர் கதாமிக்கு எதிராகப் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட பேரணிக்கு அந்த நாடு அடிபணிந்தது.

ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்திய மாணவர்கள் தாக்கப்படுவதற்குக் காரணமாக இருந்த பொலீஸ் தலைமை அதிகாரியை வேலைநீக்கம் செய்யவேண்டும் என்று மாணவர்கள் விடுத்த கோரிக்கையை ஆராய்ந்த பாதுகாப்புக் கவுன்ஸில் பொலீஸ் தலைமை அதிகாரியை வேலைநீக்கம் செய்யச் சிபார்சு செய்தது.

இதை அடுத்து பொலீஸ் தலைமை அதிகாரியும் தாக்குதலுக்குப் பொறுப்பான பொலீஸ் அதிகாரியும் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆனாலும் மாணவர்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதாகக் கூறப்பட்டது. (இ-3)

## அரபாத் -- பராக் சந்திப்பு

ஜெருசலேம், ஜூலை 13

இஸ்ரேலிய புதிய பிரதமர் எருட் பராக்கும் பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தும் நேற்று முன்தினம் முதல் முறையாக காஸாப் பகுதியில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இரு நாடுகளுக்கு இடையேயும் நம்பிக்கையை மீண்டும் உருவாக்கி அமைதி நடவடிக்கைகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கு இரு தலைவர்களும் இணங்கியுள்ளனர்.

கையெழுத்திட்ட எல்லா ஒப்பந்தங்களையும் — குறிப்பாக வைநதி ஒப்பந்தத்தை செயற்படுத்துவதற்கு இஸ்ரேல் உறுதி பூண்டுள்ளது எனவும் இஸ்ரேல்- பலஸ்தீனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் பேச்சுவார்த்தைகளுக்கு இணையாக ஒப்பந்தங்கள் செயற்படுத்தப்படும் எனவும் எகுட். பராக் தெரிவித்தார்.

பலஸ்தீன அதிபருடனான பேச்சுக்களின் பின்பு செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார் பராக்.

இதேவேளை—

'வைநதி' ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் முழுவதும் நிறைவேற்றப்படும் என பலஸ்தீனியர்கள் எதிர்பார்ப்பதாக யஸீர் அரபாத் தெரிவித்தார்.

வைநதி ஒப்பந்தத்தில் மேற்குக் கரையில் இருந்து இஸ்ரேலியப் படைகள் வாபஸ் பெறப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கமைய முன்பு ஆட்சியில் இருந்த இஸ்ரேல் அரசு மேற்குக் கரையில் இருந்து ஒரு பகுதி இஸ்ரேல் துருப்புக்களை வாபஸ் பெற்றுக் கொண்டதுடன் ஒப்பந்தச் செயற்பாட்டை நிறுத்தி இருந்தது தெரிந்ததே. (இ-க)

## எந்த நாடு ஊடுருவினாலும் நாம் நசுக்கி விடுவோம்

### வாஜ்பாய் சூளுரை

புதுடில்லி, ஜூலை 13

''அண்டை நாடுகளுடன் சமாதானத்துடனும், நட்புடனும் இருக்கவே இந்தியா விரும்புகின்றது. எந்த நாடாயினும் எமது நாட்டுக்குள் ஊடுருவி ஆக்கிரமித்தால் அந்த நாட்டை நசுக்கி விடுவோம்'' என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் சூளுரைத்தார்.

இந்தியப் படை வீரர்களுக்கு உதவி வழங்கும் நோக்கில் கிரிக்கெட் வீரர்களும் திரைப்பட நட்சத்திரங்களும் இணைந்து ஏற்பாடு செய்த கால் பந்தாட்ட ஆட்டத்தில் கலந்து பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

இந்தியா நல்ல தொரு பாடத்தை தற்சமயம் கற்றுள்ளது. எதிர்காலத்தில் எந்த வித ஆக்கிரமிப்பும் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று பாடம் புகட்டப்பட்டுள்ளது.

இந்திய-பாகிஸ்தான் எல்லைகள் சரிவரப் பேணப்பட்டபின்பே இரு நாடுகளுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும் 3 ஆந்தரப்பு எதுவும் இந்தப் பேச்சுக்குத் தேவையில்லை.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## அணு ஆயுதம் தயாரிக்க சவூதி திட்டமிடுகின்றதா?

### பாகிஸ்தான் உதவுமாம்

றியாத், ஜூலை 13

சவூதி அரேபியா அணு ஆயுதங்களைத் தயாரிக்க திட்டமிடுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதற்கு முன்னோடியாக சவூதி அரேபியாவின் பாதுகாப்பு அமைச்சர் பாகிஸ்தானில் உள்ள அணு ஆயுத ஏவுகணை மையங்களைப் பார்வையிட்டுள்ளார் என்றும்—

சவூதி அரேபியா அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கனா முன்முயற்சி இந்தவிஜயம் என்றும்— கூறப்பட்டது.

அணு ஆயுதங்கள் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை பாகிஸ்தான் சவூதி அரேபியாவுக்கு விற்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

இந்த விவகாரம் குறித்து தமது அதிருப்தியை அமெரிக்கா பாகிஸ்தானிடம் தெரிவித்துள்ளது. ]இ-3]


## கண்ணீர் அஞ்சலி

எமது அமைப்பின் சுருக்கெழுத்து ஆசிரியை

**திருமதி வி. அனுஷியா**

அவர்களின் தந்தையார்

**வி. நாகேஸ்**

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகசபையினர், மாணவர்கள்,
மக்கள் நலன்காக்கும் பிரிவு.

இருபாலைச் சந்தி,
கோப்பாய்.

(67396)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணப்பெண் தேவை

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 32 வயது மூல நட்சத்திரப் பட்டதாரி ஆசிரியருக்கு மணமகள் தேவை. விவரங்கட்கு நேரிலோ அன்றிக் கடிதம்மூலமோ தொடர்பு கொள்ள, இயக்குநர் விநாயகர் திருமண சேவை, இல. 63, கல்லூரி வீதி, நீராவியடி. (67384)

## தேவை

எம்மிடம் எல்லா மதத்திலும் மணமக்கள் உள்ளனர். 1971 ஆம் ஆண்டு கேட்டை நட்சத்திரம், லண்டனில் எஞ்சினியராகவுள்ள செவ்வாய்க் குற்றமற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. புகைப்படம், சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திரு திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (67380)

## தவறிவிட்டது

110/13 சட்டநாதர் வீதி, நல்லூரைச் சேர்ந்த பாலச்சந்திரசர்மா உதயகாந்த சர்மா என்பவரது விசேட அ. அட்டை(இல.09020083799) திருநெல்வேலி, பழங்கிணற்றடி, பிள்ளையார் கோயில் அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சட்டநாதர் கோயிலில் ஒப்படைத்துதவவும். (67377)

17/2,3 ஆம் குறுக்கு வீதி, பாஷையூரைச் சேர்ந்த செ. வின்சன் ஆகிய எனது கைச் சங்கிலி (3 பவுண்) 11-07-99 அன்று பாஷையூருக்கும், கொய்யாத் தோட்டத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (67372)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், பிளாக் (நாகலிங்க சுவாமிகள்) வீதி, சங்கானை. (67382)

## யாழ். இந்து விளையாட்டுப் போட்டி

திருநெல்வேலி, ஜூலை 13

யாழ். இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் அ. சிறிக்குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் கலந்து கொள்வார். திருமதி ஜெகதீஸ்வரி வைத்திலிங்கம் பரிசில்களை வழங்குவார். (க-135)

## கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 13

இருபாலை கிழக்கு சீ. சீ. தமிழ் கலவன்பாடசாலையின் ஆரம்பப்பிரிவுக்கென அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தின் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை அதிபர் அ. இராசரத்தினம் தலைமையில்நடைபெறவிருக்ருகின்றது.

உதவிக் கல்விப்பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) திருமதி க. சுப்பிரமணியம் பிரதம விருந்தினராக இந்த நிகழ்வில் கலந்து கொள்வார். [இ-3[

---

## யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கக் கூட்டம்

இடம்: புதிய உயர்கலைக் கல்லூரி, ஆரியகுளம் சந்தி

காலம்: 14-07-99 (புதன் காலை10 மணிக்கு)

சகல வேலையற்ற பட்டதாரிகளும் கலந்து கொள்ளவும்.

– தலைவர்

(67392)

---

புத்தம் புதிய இரு நூல்கள்
(20 வருட வினா - விடைகள் அடங்கியது)

## அளவையியலும் விஞ்ஞானமுறையும்

(பகுதி - II)

**எஸ். எஸ். மனோகரன்**

கிடைக்குமிடங்கள்:

★ ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை — யாழ்.
★ ஸ்ரீ லங்கா புத்தகசாலை — யாழ். (67370)

---

## THE SALVATION ARMY

இரட்சணிய சேனையினால் கைதடியில் மீண்டும் ஆங்கில வகுப்புகள் | ஆரம்பிக்கப்படுகின்றன.

15 - 07 – 99 அன்று புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகும்

இரட்சணிய சேனையினால் ஏழாலை வடக்கில் [V. C Office-க்கு முன்னால்]

14-07-99 அன்று தையல் வகுப்பும் ஆங்கில வகுப்பும் ஆரம்பிக்கப்பட உள்ளன.

–நிர்வாகி.

[67391]

---

## கண்ணீர் அஞ்சலி

### கோபாலபிள்ளை கனகரத்தினம்

எமது கிளையில் பணியாற்றும்

திரு. சோ. சேதுகாவலரின்

அன்புச் சகோதரர் கோ. கனகரத்தினம் அவர்களின் மறைவையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்,
இலங்கை வங்கி 2 ஆம் கிளை,
யாழ்ப்பாணம்.

[சி/8164]

---

அராலி – வண்ணப்புரம்

## ஸ்ரீ விசாலாக்ஷி அம்பாள் சமேத விஸ்வநாதேஸ்வரர் தேவஸ்தான

வழிபடுவோர் சபையினர்

## விசேட பொதுக் கூட்டம்

நாள்:– பிரமாதி வருடம் ஆனி மாதம் 30 ஆம் திகதி (14 – 07 – 99)
புதன்கிழமை மாலை 4.00 மணி (புதிய நேரம்)

இடம்:– ஷ கோயில் மண்டபம்

தலைவர்:– திரு. வி. செல்வரத்தினம் J.P. அவர்கள்
(தலைவர், பரிபாலன சபை)

சிறப்பு விருந்தினர்களாக,

திரு. ந. திரிலோகநாதன் (லோகன்) J.P.U.M அவர்கள்
(தலைவர் வலி. மேற்கு பிரதேச சபை)

திரு. கா. சந்திரராசா அவர்கள்
(பிரதேச செயலர் வலி. மேற்கு)

திரு. மு. சபாநாதன் J. P. U. M. அவர்கள்
(பதில் நீதிவான் மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்)

ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

வழிபடுவோர் அனைவரையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

து. வாமதேவன்
கௌரவ செயலாளர்

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

(67388)

---

## பொருளியல் பயிலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணம் கல்வி வலயம் யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புக்களில் பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிலமர்வு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் காலை 8 30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை நடைபெறும் பயிலமர்வில் யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத்தலைவர் ப.சிவநாதன் மற்றும் ஏனைய வள அணியினர் கருத்துரைவழங்குவர். (க-4)

---

## திரு வீடியோ விஷன்

### கலர் போட்டோ பிறிண்டிங் லாப்
### (Colour Photo Printing Lab)

## மங்களகரமான திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களம் பொருந்திய பிரமாதி வருடம்
ஆனி மாதம் 30 ஆம் திகதி (14 – 07 – 99)
புதன்கிழமை காலை 9-10 மணி
வளர்பிறை பூச நட்சத்திரம் கூடிய சுபவேளையில்,

திருவாளர் பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம்
(பிரபல தொழிலதிபர்)

அவர்களால் எமது ஸ்தாபனம் திறந்து வைக்கப்படும். அத்தருணம் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், உறவினர்கள் சகலரும் வந்து எமது ஸ்தாபனம் சிறக்க ஆசி வழங்குமாறு வேண்டுகின்றோம்.

நன்றி.

இங்ஙனம்
தி. சிவநாதன்

**திரு வீடியோ விஷன்**
கலர் போட்டோ,
மூத்தவிநாயகர் கோவிலடி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(சி/8162)

---

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் பன்னீர்ச்செல்வம்
(செல்வம்)

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதி, கலட்டிச் சந்தியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸில் வசித்தவருமான சுப்பிரமணியம் பன்னீர்ச்செல்வம் 09—07—99 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் சுப்பிரமணியம் பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், பொன்னையா துரையம்மா தம்பதியினரின் மருமகனும், அருள் வதனி (வதனி) யின் அன்புக் கணவரும், விவேக்ஸ்சன், சுவேயா (டாலி), சுவேக்ஸ்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷ்ணபேபி, வரதராஜன், சாந்தி, கேதீஸ், மஞ்சுளா, மோகன் ஆகியோரின் சகோதரனும், கமலா, விக்கினேஸ்வரி (உஷா), விமலன் (விக்ரர்), அன்ரன், விஜயன், யோகரட்ணம், தேவபாலா, சற்குணராசா, சாந்தி, அருந்ததி, உஷா ஆகியோரின் மைத்துனரும், கந்தசாமி, இராசரத்தினம் ஆகியோரின் சகலனும், மேரி யெசிந்தா, பிரதீபா, சுபாஜினி ஆகியோரின் சகோதரனும், வேனாட் விஜிதா, கிருபாகரன், சுஜாதா, முரளி,கவிதா, சுபீதா, சுபீதர்,ஸோபிதர் ஆகியோரின் அருமைச் சித்தப்பாவும், அமலன்,நிமலன், எஸ்தர் எட்வினா, யெடீஸ்வான் ஹரீஸ் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13-07-99 பிரான்ஸில் [ FRANCE ] நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

இல.40, 5ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

[ 67379 ]

### தம்பையா கணராஜசிங்கம்

77/2, C கேக்கித்த, வத்தளையை வசிப்பிடமாகக் கொண்ட தம்பையா கணராஜசிங்கம் (07 – 07 - 99) புதன்கிழமை அன்று சவூதி அரேபியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் சுலோஜனாவின் (ஆசிரியை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை வத்தளை)அன்புக் கணவரும், கோபிகா, கிருஷாந் ஆகியோரின் அன்புத் தந்தையும். ஏழாலை தெற்கு காலஞ்சென்ற முருகேசு சிவலிங்கம் (விவசாயத் திணைக்களம்), திருமதி சிவலிங்கம் இராசம்மா, (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும், ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
சி. தனேஸ்வரலிங்கம்
[மைத்துனர்]

தேவாலய வீதி,
சங்கானை.

(67378)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் பயணத்துக்குப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

[நேற்றைய தொடர்ச்சி]

## நல்லூர்

எஸ். பாலசிங்கம (107117 ஏ), பி. தர்சினி (107132ஏ), பி). ராகவன் (107132பி), கே. நடராஜா (107214ஏ), ஆர். மன்மதராஜன் (107218 ஏ), எம். நாகபூசாரி(107218 பி), கே. சாரததாதேவி (107242ஏ), என். ராஜேஸ்வரி (107258ஏ), என். நாகலிங்கம் (107258பி), ஏ. செல்லையா (107269ஏ). என். யோகேஸ்வரி (107346ஏ, ஈ. ஆர். ஜெயபாலசிங்கம் (107380ஏ), எஸ். எழிலரசி (107397ஏ), ஜே. சுப்பிரமணியம் (066517ஏ), எஸ். இந்திரா (066517பி), வீ. சிவகுமார் (066517சி), ஆர். ராசமஞ்சரன் (089246ஏ). என். கதிரவேலு(091530ஏ), என். திருநாவுக்கரசு (091605 ஏ), ரீ. பிரபாலினி (091605 பி), ஜி. தம்பிப்பிள்ளை (091754ஏ), எஸ். பாலசுப்பிரமணியம் (094744ஏ), ஆர். பாலசுப்பிரமணியம் (094744பி), எஸ் வைத்திராஜா (095541ஏ). இயலேஸ்வரன் (096384பி), எஸ். ராஜசிங்கம் (096398ஏ), கே. ராஜேஸ்வரி (096398பி), கே. ஜெயச்சந்திரன் (096398 சி), கே. சிவராஜா (096424 ஏ), எஸ். சிவராஜா(096424 பி), வீ. கனகசபை (097014 ஏ), கே. நாதவமூர்த்தி (097315ஏ), பி. என். செல்வத்துரை (097315பி), எம். தர்மராணி (097355ஏ), ஆர். மதுகலா (097412ஏ), ரீ. கிஸ்ணகுமார் (097480ஏ), ஆர். வேலாயுதபிள்ளை (099182ஏ), எம். சங்கரலிங்கம் (099203ஏ), கே. ஜெயராணி (099704ஏ), ரீ.யோகராஜா (099707ஏ), பி. தங்கராணி (10012 ஏ), ரீ. ஜெயமோகன் (100122பி).

டபிள்யு. சோமசுந்தரம் (100183 ஏ), பி.பத்மநாதன் (100184 ஏ), எஸ். நாகேஸ்வரி (100233 ஏ), பி.கனேஸ்வரி (100233 பி), பி. கதிரேஸ்வரன் (100233 டீ), ஏ. புஸ்பராணி (101113ஏ), ஆர். யோகாநந்தன்(101140 ஏ), வை. றோஜினிதேவி (101140 பி), பி. செரமிக் (101232 ஏ), கே, பவனலிங்கம் (101268 ஏ), பி. நுக்மணி (101268 பி), பி. அன்னலிங்கம் (101309 ஏ), வீ. பழனி (101374 ஏ), எம். பாசலிங்கம் (101382ஏ), டீ. பத்மஸ்ரீ (101396 ஏ), எஸ். கே. ரட்ணசபாபதி (101914 ஏ), எம். நடேசபிள்ளை (101941 ஏ), என். மதிவாணி (101941பி), வீ. சந்திரன் (101958 ஏ), ஏ. சந்திரன் (101958 பி), சந்திரகவிதா (101960 ஏ), கே. பாலசுப்பிரமணியம் (101978ஏ), வீ.நாயெநோரா (102024ஏ),எஸ். ஜெயந்தன் (102068ஏ), டபிள்யு. செல்லத்துரை (102068பி), ஐ. சிவராஜா (102102 ஏ), டீ. அருனேசன் (102105ஏ). கே. பத்மகுமாரன் (102128 ஏ), எஸ். நடராசா (102135 ஏ), எஸ்.சேந்திரன் (102163 ஏ), ரீ. தயாபரன் (102169 ஏ), எஸ். மனலேஸ்வரி (102169பி), என். பாசுதமணி (102189ஏ), பி. நல்லதம்பி (102189பி), என். சுமதி (102189சி), டீ. அதிஸ்குமார் (102191ஏ), எஸ். தங்கேஸ்வரி (103191பி), எஸ். சஜென் (102191சி), எஸ். நிசிந்தா (102191டீ), கே.நாகரட்ணம்(102195ஏ),

வீ. வரதையா (103238 ஏ), டபிள்யு. சுஜீவா(103251 ஏ), எஸ் திவ்வியகுமாரன் (103262ஏ),ரீ. மதுசோபிகா (013262பி), டீ. சுதாகரன் (103270ஏ), ரீ. பாலகிருஷ்ணன்(103283ஏ), எஸ். பாலகிருஷ்ணன் (103283பி), பி. திருநாவுக்கரசு (103300 ஏ), ஏ. கலிஸ்ரன் (103314 ஏ), ரீ. வனந்தராசா (103320ஏ), எஸ். ராஜேந்திரன் (103321ஏ), ரீ. மொகாந்திரன் (103329ஏ), எஸ். ரவீந்திரகுமார் (103369ஏ), எஸ். பிரேமச்சந்திரன் (103373ஏ), பி. கனகசபாபதி (103380 ஏ), ஜி. அமிர்தலிங்கம் (103397 ஏ), ஏ. தர்சிகா (1003397 பி), எம். எலிசபெத்ராணி (103401 ஏ), எம். பபாஸ் (103401 பி), எல். கந்தையா (103403 ஏ), எஸ். வரதலக்ஷ்சன் (103417 ஏ), எஸ். வாசுகி (103417 பி), ஏ. அமிர்தலிங்கம் (103439 ஏ), டபிள்யு. இந்திரன் (103441 ஏ), எஸ். சுமதி (103455 ஏ), பி. நடராசா (103458 ஏ), டபிள்யு. அகிலன் (103469 ஏ), பி. கனகலிங்கம் (103486 ஏ), கே. ஆறுமுகம் (103486 பி), கே. சிவரட்ணம் (103503 ஏ), பி.கார்த்திகேசு (103511 ஏ), என். ராசேஸ்வரி (103517 ஏ), எம். ஈஸ்வரன் (103530 ஏ), கே. குணரட்ணம் (103531 ஏ), ஆர். குணரட்ணம் (103531 பி), ஆர், தவராஜா (103544 ஏ), எஸ். ஜெயராணி (103553 ஏ), எஸ் சிவராமினி (103553பி), ஏ. யோகேந்திரன் (103566 ஏ), எஸ். யோகேந்திரன் (103566 பி).

எஸ்.புஸ்பவதி (103645ஏ,) என். டீ. எஸ்- பாலசுப்பிரமணியம்(103652ஏ),சித்திரா தங்வடிவேலு (103653 ஏ), எஸ்.தனலக்ஷ்மி (103661ஏ)· பி.பிரகாஜினி( 03671ஏ),எம்' பாலசுப்பிரமணியம் (103671 பி), எம்.குமாரசாமி (103675 ஏ), எஸ்.குமாரசாமி(103675 பி),வீ.அரியரட்ணம்(103676 ஏ), ஏ. ஆர். மைவதனி (103676பி), ஏ.அரியரட்ணம் (103676சி), ஆர். சப்தியா (103676டீ), ஏ. ராஜ்குமார் (103676ஈ), ஆர். ஸ்றோன் (103676 ஜி), பி. ராசகி (103679 ஏ) பி. விஜயரூபன் (103679 பி), ரீ. சுகந்தினி (103706ஏ), எஸ். ஜெயநந்தினி, (103712 ஏ), வீ. சின்னத்துரை (103712பி), எஸ். செல்லத்துரை (103728 ஏ), எஸ். வசந்தகுமாரி (103728 பி), எல். குமார் (105124ஏ), கே. மனோன்மணி (105124 பி), கே.சாந்தினி(105124சி), கே. காந்தரூபன்(105124டீ), கே. யோதயந்தை (105181 ஏ), ஜே. மனோராணி (105181பி), வீ. நமசிவாயம் (105198ஏ), எம். சிவபாலன் (105291ஏ), எம். சிவபாலன் (105291பி), கே. கவீந்திரன் (105830ஏ), என். குமரேஸ்வரன் (105925ஏ), கே. குகாநந்தன் (105947ஏ), என். நடேசு (106111ஏ), டபிள்யு. ரஞ்சனி (106163 ஏ), டபிள்யு. பிரகவன் (106163பி), ஆர். பிரலானந்தன் (107355ஏ).

கே. புஸ்பாதேவி (108619 ஏ), கே. தனலக்ஷ்மி (108619பி), எம். ராமச்சந்திரன் (108667ஏ), எஸ். சிவசத்தியராஜா (0125ஏ), வீ. சிவசத்தியராஜா [10125பி], சீ. கமலராஜன் (0105), டாக்டர் எஸ். என். தணிகாசலம்பிள்ளை [0114], வீ. இலங்கநாதன் [01181, கே. துரைராஜ் [0120], எஸ். சிவசத்தியராஜா (0125ஏ), வீ. சிவசத்தியராஜா [0125பி], வீ. எஸ். சொக்கலிங்கம் [0133], என். சிவலிங்கம் [0134ஏ], எஸ். மகிலினி [0134பி[, டாக்டர் எஸ். என். தணிகாசலம் பிள்ளை [0135], சீ. ஆர். சீ. எஸ். நச்சிநார்க்கினியன் [0139], ரீ. சிவானந்தராஜா [0141].

# உதவி வழங்கும் நாடுகள் கூட்டம் இந்த ஆண்டு நடை பெறுமா?

## இழுபறி நிலை நீடிக்கிறது

கொழும்பு, ஜூலை 13

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இம்முறை நடைபெறுமா? இல்லையா? என்பது குறித்து இழுபறி நிலை நிலவுவதாக செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம்வழமையாக பாரிஸில் ஒக்ரோபர் அல்லது நவம்பர் மாதத்தில் நடைபெற்று வந்தது.

இந்தமுறை இந்தக் கூட்டத்தை டிசெம்பரில் கொழும்பில் நடத்த வேண்டும் என்று உதவி வழங்கும் நாடுகள் தெரிவித்துள்ளன.

ஆனால் இலங்கை அரசாங்கம் கொழும்பில் அந்தக் கூட்டத்தை நடத்த மறுப்புத் தெரிவித்துள்ளது.

அத்துடன் கடந்த காலங்களில் இலங்கை மனித உரிமை நிலை குறித்து அக்கறை காட்டாத உதவி வழங்கும் நாடுகள் இலங்கை மனித உரிமை நிலை குறித்து ஆராய ஒக்ரோபரில் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பப் போவதாகத் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் — வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் அல்லது நாடாளுமன்றத் தேர்தலை இலங்கை அரசு நடத்த முனைந்துள்ள நிலையில் இலங்கைக்கு உதவி வழங்க முடியுமா என்று உதவி வழங்கும் நாடுகள் சிந்திக்க ஆரம்பித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# காட்டுப் பகுதிக்குள் பாதை மாறி சென்றனராம்

## திரும்பி வந்த படையினர் தகவல்

மட்டக்களப்பு, ஜூலை 13

விடுதலைப் புலிகளைத் தேடி அம்பாறைக் காட்டுப் பகுதிக்குச் சென்ற பொலீஸ் மற்றும் இராணுவத்தினர் கடந்த வியாழக்கிழமை பகல் பாதுகாப்பாகத்திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை பிபிலை வீதியில் முல்லேகம கிராமத்தில் ஆயுதபாணிகளால் 4 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் இரு வாகனங்களும் எரிக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து கடந்த புதன் கிழமை அதிகாலை தொடக்கம் மகாஓயா, அரந்தலாவ, இங்கினியாகல காட்டுப் பகுதிகளில் பொலீஸ், இராணுவம் உட்பட அதிரடிப் படையினரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சுமார் 300 பேர் வரையில் இந்தத் தேடுதலில் ஈடுபட்டனர்.

இவர்கள் புதன் கிழமை மாலை வரை திரும்பாததையடுத்துப் பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தக் காடுகளுக்குள் சென்ற படையினருடன் பொலீஸார் தொடர்பு கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் தொடர்பு எதுவும் கிடைக்காத நிலையில் விமானப் படை விமானங்கள் மூலமும் இந்தக் காடுகளில் தேடுதல் நடத்தப்பட்டது.

காணாமற் போனதாகக் கருதப்பட்ட படையினர் வியாழன் பகல் களைத்துச் சோர்வடைந்த நிலையில் பொலீஸ் நிலையங்களுக்குத் திரும்பினர்.

காட்டுப் பகுதியில் பாதை மாறிச் சென்றதாலேயேஇவர்கள்குறிப்பிட்டநாளில்திரும்பி வரமுடியவில்லை என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-2..)

# சமயச் சொற்பொழிவு

வடமராட்சி, ஜூலை 13

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நாளை புதன் கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

மாணவர்களின் இந்து சமய அறிவு விருத்தியை ஒட்டி இந்த சமய சொற்பொழிவு இடம்பெறுகிறது.

(இ-173)

# குருபூசை

சுழிபுரம், ஜூலை 13

மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை வழக்கம் பறை அம்மன் கோவிலில் நடைபெறவுள்ளது. அம்பாளுக்கு விசேட பூசை வழிபாடுகளும் நடராசப் பெருமானுக்கு பூசை வழிபாடுகளும் இடம் பெறும். (இ-28)

# குருபூசை தினத்தையொட்டி பேச்சு மற்றும் போட்டிகள்

வடமராட்சி, ஜூலை 13

முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 14 ஆவது ஆண்டு குருபூசை தினத்தை ஒட்டி யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே குறள்பா அறிவுப் போட்டி, பேச்சுப் போட்டி என்பன தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்படவுள்ளன.

ஆண்டு 6 தொடக்கம் 11 வரையிலான மாணவர்களிடையே நடத்தப்படவுள்ள இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் பாடசாலைகள், பெற்றோர்கள் மூலமாக இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ஒருவர் இரு போட்டிகளிலும் பங்குபற்றலாம். போட்டிகள் அடுத்த மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும்.

வெற்றி பெறும் மாணவர்களுக்கு மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசைத் தினமான அடுத்த மாதம் 16 ஆம் திகதி பணத்தொகையும், பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

(இ-173)

# 40 ஏக்கர் நிலப்பரப்பில் மாதிரிப் பனந் தோட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 13

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் பனை அபிவிருத்திச் சபையினால் யாழ். குடாவில் 40 ஏக்கர் நிலப்பரப்பில் நான்கு மாதிரிப் பனந் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பளை, குடத்தனை, அராலி, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் 10 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாக இந்த மாதிரித் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மாதிரிப்பண்ணைகள் ஒவ்வொன்றிலும் 10 ஆயிரம் பனை விதைகள் நடுகை செய்யப்பட்டு விதைகளின் நடுவே மரமுந்திரிகை மற்றும் வேம்பு போன்றவற்றினை ஊடுபயிராக நடுகை செய்துள்ளதாக பனை அபிவிருத்திச்சபை பொது முகாமையாளர் எஸ். கோகுலதாசன் தெரிவித்தார்.

ஐ. நா. அபிவிருத்தித்திட்ட அதிகாரிகள் குழுவொன்று இந்த மாதிரிப் பனந் தோட்டங்களை அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டு தது திருப்தியை தெரிவித்துள்ளது.

(இ—5)

# கண்காட்சி

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் ஆனைக் கோட்டை உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடத்தப்பட்ட உணவு பதனிடுதல், பாதுகாத்தல் பற்றிய பயிற்சி வகுப்பில் செய்யப்பட்ட உணவுப் பொருள்களின் கண்காட்சி இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் ந.சிவபாதம் தலைமையில் நடைபெறும் இந்த கண்காட்சியில் பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.செல்வராஜா கலந்து கொள்வார்.

(இ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல் குவித்து ஒரு வருடமாகியும் வீதி திருத்தப்படவில்லை

அராலி பிரதான வீதியை திருத்துவதற்கு கற்கள் பறிக்கப்பட்டு ஒரு வருடமாகியும் வீதி இன்னும் திருத்தப்படவில்லை.

789 இலக்க பஸ் செல்லும் அராலி அம்மன் கோவில் பிரதான வீதியை திருத்த ஒரு வருடத்துக்கு முன்னர் கற்கள் பறிக்கப்பட்டன. ஆனால் இன்றுவரை வீதி திருத்தப்படவில்லை.

கற்கள் வீதியின் இரண்டு பக்கங்களிலும் பறிக்கப்பட்டுள்ளன. இதனால் வீதியில் வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்துவதில் பெரும் சிரமம் ஏற்படுகிறது. (இ-175)


இணுவில்

விசாலாட்சி சமேத

விஸ்வேஸ்வரசுவாமி திருத்தலத்தில்

**உற்சவ மூர்த்தி குடமுழுக்கு**

நாளை புதன் காலை 7.15 தொடக்கம் 8.00 மணிவரை கும்பாபிஷேகம் நடைபெறும்.

மாலை 5.00 மணிக்கு பூசை, திருவூஞ்சல், திருவுலா என்பன நடைபெறும்

பிரதமகுரு: தாணு. வாசுதேவக் குருக்கள்

– உபயகாரர்.

விக்கிரக அமைப்பு:
க. மோகன் ஆசாரி,
யாழ். வண்ணை.

[67376]



**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரி ஆசிரியை

திருமதி கௌரி சிவகுமார்

அவர்களின் சகோதரி

**செல்வி சுமங்கலி குணநாயகம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு, அவரது ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலக ஊழியர்கள்

யா/இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(67381)



**நீங்காத நினைவில் ஓராண்டு**



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 | 25 |
| — | — |
| 05 | 06 |
| — | — |
| 1947 | 1998 |

**அமரர் முருகையா தேவதாசன்**

திதி: 13 – 07 – 1999

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது.

அன்பின் பிறப்பிடமாய் அறிவின் சுடராய்
வந்து எங்களுக்கு வழிகாட்டிய அப்பாவே!
உங்கள் அன்பும் அரவணைப்பும் எங்களுக்கு
இனி இல்லையே! எங்களை விட்டுப் போக எப்படி
மனம் வந்தது?
நாங்கள் அழுகின்றோம் ...... ஊமையாய்
நின்று வழிகாட்டாது பெரும் தூரம் சென்றதென்ன?

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, மகள், சகோதரர்கள்.

வல்லை வீதி,
தொட்டிலடி,
சங்கானை.

[67357]


# சுயதொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதியம், சமூகப்பாதுகாப்புத்திட்டம்

## பிரதேச செயலகங்கள் அமுல்

வலிகாமம்தெற்கு, ஜூலை 13

சுயதொழில்களில் ஈடுபட்டிருப்போரில் குறைந்த வருமானம் உடையவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டம் ஒன்றை அமுல் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமூக பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள சமூக பாதுகாப்புச் சபையினரால் மேற்படி திட்டம் நாட்டிலுள்ள பிரதேச செயலகங்களூடாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

நாட்டிலுள்ள அரசதுறை, தனியார்துறை ஊழியர்கள், கடற்றொழிலாளர்கள், கமக்காரர்கள் போன்றோருக்கு ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்படுவது போன்று சுயமாகத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் ஓய்வூதியம் சமூகப்பாதுகாப்பு என்பன கிடைப்பதற்கு இத்திட்டம் வழிசெய்கின்றது.

சுயமாக தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மேற்படிதிட்டத்தை அமுல்படுத்துமாறு சமூகசேவைகள் அமைச்சு அறிவித்துள்ளதைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் ஊடாகவும் அதனை நடைமுறைப்படுத்த யாழ்ப்பாண அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக பிரதேச செயலக உயர் அதிகாரிகளையும், இத் திட்டத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களையும் அழைத்து பூரண விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் இத் திட்டத்தின் கீழ் எதிர்வரும் 21 ஆம் திகதி பயனாளிகள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்,

தற்போது சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு வருபவர்களில் இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ள விருப்பமுடையவர்களை அன்றைய தினம் உரிய பணத் தொகையுடன் உடுவில் பிரதேச செயலகத்திற்கு வருமாறு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். ஆர். ஜெயப்பிரகாசம் அறிவித்துள்ளார்.

மேற்படி திட்டத்தில் சேர விரும்புவோர் அத் திகதிக்கு முன்பாக தத்தமது பிரிவுக் கிராம சேவையாளர்கள் அல்லது பிரதேச செயலகத்தில் உள்ள சமுர்த்தி ஊழியர்களைச்சந்தித்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (இ-152)

# வயலின் இசை

வடமராட்சி, ஜூலை 13

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதி முருகன் கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தம்பு சற்குருநாதனின் வயலின் இசை இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கான அறிமுகவுரையை கலாவினோதன் நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி) நிகழ்த்துவார். (இ-173)

# பயிற்சிப் பட்டறை

வடமராட்சி, ஜூலை 13

தேசியஇனவிவகார அமைச்சின் நிதி உதவியின் கீழ், மகளிர் விவகார அமைச்சின் அனுசரணையுடனும், வடக்குக்கான மீள் குடியமர்வு புனரமைப்பு அதிகாரசபையின் ஆதரவுடன் யாழ். மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தால் ''முயற்சி'' முகாமைத்துவப் பயிற்சிப்பட்டறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் உள்ள விவசாயப் பயிற்சி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சிப்பட்டறை சனி, ஞாயிறு போயா தினங்களில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 17 ஆம்திகதி வரை நடைபெறும்.

குடாநாட்டிலுள்ள மகளிர் நிறுவனங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 30 பேர் இந்தப் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்கின்றனர். (இ-173)

# சீருடை அணியாது தாதியர் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையிலிருக்கும், பெண் தாதியர்களில் சிலர் நேற்று முன் தினம் தாதியர்களுக்கான சீருடை அணியாது சாதாரண உடையில் கடமையில் ஈடுபட்டனர்.

சுமார் 21 பெண் தாதியர் இவ்வாறு சீருடை இன்றி கடமையில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலை தாதியர் விடுதியில் தங்கியிருந்து கடமை செய்துவரும் இவர்கள் விடுதியில் தமக்கு மறுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சில அடிப்படை வசதிகளைக் கோரியே இந்தப் போராட்டத்தில் இறங்கி உள்ளனர் என்று கூறப்பட்டது.

முக்கியமாக விடுதிக்கு வழங்கிவந்த 24 மணிநேர தண்ணீர் விநியோகம் வெட்டப்பட்டு குறிப்பிட்ட நேரங்களில் மாத்திரம் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும்—

கடந்த ஐந்து நாள்களாக இந்த நிலை நீடித்து வருவதாகவும்—

தாதியர்கள் தமது நிலையை எடுத்து விளக்கி ஆஸ்பத்திரி நிர்வாகத்துடன் தொடர்பு கொண்ட போதிலும் எந்தவித பலனும் கிடைக்கவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட சில நேரங்களில் மட்டும் தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவதனால் தாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்—

தமது தண்ணீர்த் தேவையை போதியளவு பூர்த்தி செய்யமுடியாமலிருப்பதாகவும்—

போதிய தண்ணீர் இல்லாத காரணத்தால் தமது சீருடைகளை துவைக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் — தாதியர்கள் தெரிவித்தனர். (இ-6)


**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்

**சிதம்பரப்பிள்ளை துரைராஜசிங்கம்**

(ஆய்வுகூட உதவியாளர், யா/ மெதடிஸ்தபெண்கள் உயர்தர பாடசாலை)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23-01-1949 | 24-06-1998 |

திதி: 13-07-1999

பிரிவால் துயருறும்
தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

[illegible]னார் கலட்டி,
பருத்தித்துறை.

(67271)



**புதுக் கடைத் திறப்பு விழா**

**விநாயகர் பென்சி**

இதுவரை காலமும் இல. 06, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த

**லிங்கம் பூங்கா** என்னும் எமது ஸ்தாபனம் 14 – 07 – 99

புதன்கிழமை 8. 30—10. 45 மணி வரையுள்ள சுபவேளையில் இல. 23, நவீன சந்தை, பெரியகடை வீதியில் விநாயகர் பென்சி என்னும் பெயரில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதனை சகல வாடிக்கையாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**)( விநாயகர் பென்சி )(**

இல. 23, நவீன சந்தை, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(67373)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நடிப்பும் நடப்பும்

யாழ்ப்பாணக் குடாநாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதிலும் அதனை வளர்ச்சியுறச் செய்வதிலும் அரசாங்கம் எவ்வளவு அக்கறையற்றுச் செயற்படுகிறது என்பது மீண்டும் ஒரு தடவை அம்பலமாகி உள்ளது.

ஐரோப்பிய சமூக நாடுகள் முன்னர் வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பிய கவலை தெரிவிக்கும் குறிப்பு முதலாவது அடி. அந்த நாடுகள் குடாநாட்டில் ஆற்றும் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளுக்கு உதவுவதில் அரசாங்கம் தனக்குரிய பொறுப்புடன் நடக்கவில்லை என்று குற்றஞ்சாட்டி இருந்தன.

அதாவது தங்களுக்கு முன்னாற் சென்று வழிசொல்லிக் கருமம் ஆற்ற வேண்டிய அரசு, தாங்கள் செய்யும் பணிகளைப் பார்வையாளராக நின்று பார்க்கிறது. அதனால் தங்கள் பணிகளைக் குடாநாட்டில் சுருக்கிக் கொள்ள நேரிடும் என்று எச்சரிக்கும் தொனியில் அந்தக் குறிப்பு அமைந்திருந்தது.

குடாநாட்டுக்கும் கொழும்புக்கும் இடையில் சீரான போக்குவரத்து வசதி இல்லாததால் தமது பணிகளில் பின்னடைவு காண்பது குறித்தும் அந்தக் குறிப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

அரசின் அணுகுமுறையும் செயற்பாடுகளும் இதே பாணியில் தொடருமாயின், ஐக்கிய நாடுகள் சபையின் அலகுகள் மட்டுமே குடாநாட்டில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளைச் செய்யும் நிலை உருவாகும் என்றும் ஐரோப்பிய சமூக நாடுகள் தெரிவித்திருந்தன.

ஆனால் இப்போது ஐக்கிய நாடுகள் சபையின் பிரிவுகளில் ஒன்றான உலக உணவு ஸ்தாபனமே தனது விவசாய விஸ்தரிப்புப் பணிகளை நிறுத்தப் போவதாகக் கூறியுள்ளது.

குடாநாட்டில் விவசாய விஸ்தரிப்புச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தேவையான பொருள்களை எடுத்து வருவதற்குப் பாதுகாப்புத் தரப்பு ஒத்துழைக்கவில்லை என்றும்—

அதனால் தமது ஸ்தாபனம் இங்கு மேற்கொள்ளத் திட்டமிட்ட விவசாய விஸ்தரிப்புப் பணிகளை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்றும் — உலக உணவு ஸ்தாபனத்தின் வதிவிடப் பிரதிநிதி பீற்றர் லீட்டெட் வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

விவசாய விஸ்தரிப்பு வேலைகளுக்குப் பயன் படுத்தப்படும் மண்வெட்டி, தோட்டக் கைமுள்ளு, கத்தி என்பனவற்றில் தேவையான எண்ணிக்கையில் அரைவாசியைமட்டுமே கொண்டு வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்படாத இப்பொருள்களைக் கொண்டு செல்வதற்கே இவ்வித கட்டுப்பாடு விதிப்பது குடாநாட்டின் அபிவிருத்திக்குக் குந்தகம் விளைவிக்கும் அணுகு முறை என்பதனை அரச அதிகாரிகளினால் மறுக்க முடியுமா?

''பாதுகாப்புக் காரணம்'' என்ற முத்திரையைக் குத்தித் தமிழர்களின் அன்றாட வாழ்க்கையைச் சிறைபிடித்திருப்பது போல—

வெளிநாடுகளுடனும், ஐ. நா. போன்ற சர்வதேச அமைப்புக்களுடனும் — தமது மெத்தனப் போக்கை படை அதிகாரிகள் காட்ட முயல்கிறார்கள்.

அரசு யாழ்ப்பாணத்தில் அக்கறை உள்ளதாக நடிக்கிறது. ஆனால் உண்மையில் அதற்கு எதிரான குழிபறிப்புத்தான் நடக்கிறது. இதனை வெளிநாடுகளே அம்பலப்படுத்த தொடங்கி விட்டன. இதன் பின்னரும் அரசின் நடிப்பை தமிழர்கள் நம்பவேண்டுமா?

## சமய சந்நிதிகளில்

நல்லூர், ஜூலை 13

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காமம் தேவஸ்தான வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகி 17 நாள்கள் நடைபெறும்.

தினமும் பிற்பகல் 5மணிக்கு பூசைகள் ஆரம்பமாகும். 29 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

(இ–103)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 13

மீசாலை பன்றிக்கேணி முருகமூர்த்தி ஆலய அலங்கார உற்சவம் இன்று 13 ஆம் திகதிஆரம்பமாகி தொடர்ந்து 17 நாள்கள் நடைபெறும்.

30 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவு பெறும்.

கதிர்காமம் செல்ல முடியாத பக்தர்கள் இந்த ஆலயத்தில் விரதம் அனுஷ்டிப்பது குறிப்பிடத்தக்கது. (இ–117)

★ ★ ★

அரியாலை, ஜூலை 13

யாழ். கோட்டை முனீஸ்வரன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறவுள்ளது.

[க–17]

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 13

எழுதுமட்டுவாள் விளுபளை கண்ணகை அம்பாள் ஆலய மகோற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

இம் மாதம் 27 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

(க–117)

★ ★ ★

வடமராட்சி, ஜூலை 13

தென்புலோலி தான்தோன்றி ஈஸ்வர உபயகதிர்காம ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 29 ஆம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க–173)

★ ★ ★

வடமராட்சி, ஜூலை 13

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க–173)

## சென். பீற்றர்ஸ் தேவாலய முன்றலில் நினைவஞ்சலி

நவாலி ஜூலை 13

நவாலியில் 95 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதி மேற் கொள்ளப்பட்ட புக்காரா விமானத் தாக்குதலின் போது உயிரிழந்தவர்களின் நான்காவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு சென் பீற்றேஸ் தேவாலய முன்றலில் நவாலிப் பங்குத்தந்தை அன்ரனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இறந்தவர்களின் உருவப் படங்கள் சமய வேறுபாடின்றி ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டிருந்தன.

இவற்றுக்கு மலர் மாலைகள் அணிந்து திருவிளக்கேற்றியதைத் தொடர்ந்து உற்றார், உறவினர்கள் கதறி அழுதனர்.

பொனிப்பஸ் அடிகளார் சகாயநாயகம் அடிகளார் தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த அருட் தந்தை ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு இரங்கலுரை நிகழ்த்தினர். [இ-100]

## மாத இறுதியில் விடுதி திறந்து வைப்பு

நெல்லியடி ஜூலை 13

வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுவரும் ஆண்கள் விடுதி, இம்மாத இறுதியில் திறந்து வைக்கப் படவுள்ளது.

கடந்த 47 ஆம் ஆண்டு கட்டப்பெற்று, இராணுவ வன்செயலால் இடிந்த நிலையில் பாவிக்க முடியாதவாறு அமைந்திருந்த இந்தக் கட்டடத்தை பருத்தித்துறை போரூட் நிறுவனமும், வைத்தியசாலை அபிவிருத்திச்சபையும் ஒன்றிணைந்து புனரமைப்புச் செய்து வருகின்றன.

இந்த விடுதி திறந்துவைக்கப்பட்டதும், இப்பகுதியில் 15-க்கு மேற்பட்ட ஆண் நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவார்களென வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கே. மயிலேறும்பெருமாள் தெரிவித்தார். (இ–109)

## திறந்து வைப்பு

சுழிபுரம், ஜூலை 13

வலிகாமம் கல்வி வலயப் பிரிவு ஒன்றின் கல்வி அலுவலகம் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாசாலைக்கு அண்மையிலுள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

(இ–28)

# யாழ். மண்ணில் ஞானசீலர்கள் அருகிவிட்டதால் பெரும் இடைவெளி

### இளைப்பாறிய நீதிபதி 'திரு' கவலை

சாவகச்சேரி, ஜூலை 13

யாழ்ப்பாணம் அன்று சிவபூமி என்று அழைக்கப்பட்டது. ஆனால் இன்று நாம் துன்பத்தில் சீரழிகிறோம்.

யாழ். மண்ணில் வாழையடி வாழையாக வாழ்ந்த ஞானசீலர்கள் கூட்டம் அருகி விட்டது. அத்துறையில் பெரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது.

இக்காலத்தில் சிவனருள் பெற்றவர்கள் மிகமிகக் குறைவு. அதனால் நல்லவர்களை, தொண்டர்களை இனங்கண்டு இறைவன் அவர்கள் மீது அருள்சுரக்கிறார். அத்தகைய ஞான சீலர்களில் ஒருவரே இங்கு வீற்றிருக்கும் அருட்திரு. பரமசுவாமி சுவாமிகள்.

இவ்வாறு தெரிவித்தார் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு.

சாவகச்சேரி ''வித்தகம்'' குருமணி அருட்திரு பரமசுவாமி சுவாமிகளின் 50 ஆவது ஜெயந்தி தின மகுட விழா அண்மையில் நடைபெற்றது. சாவகச்சேரி வாரிவனநாத சிவன் கோயில் மண்டபத்தில் மூத்த சமய விரிவுரையாளர் சிவஸ்ரீ ஈஸ்வர சர்மா தலைமையில் நடைபெற்றது. அங்கு வாழ்த்துரை நிகழ்த்துகையிலேயே இளைப்பாறிய நீதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும்தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த போது, தியாகசீலர்கள் வாழ்ந்த மண்ணான தென்மராட்சிக்கு வந்தோம். எம்மை எல்லாம் இப்பிரதேச மக்கள் வரவேற்று புகலிடம் தந்து உதவினார்கள். இது அந்த மக்களின் சைவ சமய உணர்வைக் காட்டுகின்றது. எந்த மண்ணில் சைவசமயம் வளர்கின்றதோ அங்கு நல்லெண்ணம் படைத்த மக்கள் வாழ்கின்றார்கள் என்பதாகும். இம் மக்களில் தவத்திறன் உள்ள ஞானசீலர்கள் இருக்கிறார்கள். அவர்களை மக்கள் கௌரவிக்க வேண்டும். அவ்வாறு செய்வதினால் இப்பகுதிமக்கள் வாழ்கிறார்கள். இந்த ஞானசீலர்கள் இறைவனுடன் கலந்து மக்களை நல்வழிப்படுத்த உதவுகிறார்கள்.

6 ஆம் 7 ஆம் நூற்றாண்டுகள் நாயன்மார் காலம். அக்காலப் பகுதியில் அவர்கள் இறைவனுடன் ஒன்றறக் கலந்து அருள் கொடுத்தார்கள். அக்காலத்தில் உள்ளவர்களைப் போன்று இக்காலத்தவர்களால் ஆன்மீக சக்தியைப் பெறமுடியவில்லை.

மனிதர்கள்அளவுக்கு அதிகமான ஆசைகளை வளர்த்துச் செல்வத்தைத் தேடுகின்றனர். இன்னொரு புறத்தில் மிருகங்களும் செய்யாத அளவுக்குப் பஞ்சமா பாதகங்களைச் செய்கிறார்கள். இவற்றால் மனிதனிடத்தில், சமூகத்தில் துன்பமே மலிகின்றது.

இத்துன்பத்தை நீக்கப் பிரார்த்தனை மூலம் இறைவனுடன் ஒன்றிப்பவனுக்கே முடிகிறது. வித்தகம் குருமணியும் பிரார்த்தனை, யோகம் மூலம் இறைவனுடன் ஒன்றித்து அருள் பெற்று அதனோடு மற்றவர்களுக்கு உதவுகிறார்—என்றார்.

இந்து இளைஞர் பேரவையின் செயலாளர் சி. சக்திகிரீவன் பேசுகையில் கூறியதாவது:

மக்கள் இப்போது சமய போதனைகளைப் பின்பற்றுவதில்லை. அதனை அள்ளி வழங்கும் திறன் மிக்க அருளாளர்கள் எம்மிடம் மிகக் குறைவு. அந்தக் குறையை நீக்கவே எம் மத்தியில் நல்ல அருளாளர் ஒருவரான அருள்திரு பரமசுவாமி அவர்களை இறைவன் கொடுத்துள்ளான்.

பிரார்த்தனை மண்டபங்கள் இன்று தேவை. பிரார்த்தனை மூலம் இறைவனைக் காணலாம்.இப்பிரார்த்தனை வடிவமாக இறைவனுடன் கலந்தவர் பரமசுவாமிகள். அவர் அடக்கமாக இருந்து சமய சமூகத் தொண்டுகளை செய்து வருகின்றார் — என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்துகையில் —

மண்ணில் வாழ்பவர்கள் இன்று பலவித அல்லற்படுகின்றார்கள்.அதனை நீக்க இறைவனை வழிபடல் வேண்டும். தானும் வாழ்வதுடன் மற்றவர்களையும் வாழ வைக்க வேண்டும் என்ற எமது சமய தத்துவத்திற்கு ஏற்ப வாழ வேண்டும். நாம் நல்லதைச் செய்வதன் மூலம் நல்லனவற்றைப் பெறலாம் — என்றார்.

தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை பேசுகையில் அமரர் ஆத்மஜோதி நா. முத்தையா பாதயாத்திரை மூலம் பலரையும் பிரார்த்தனை நெறிக்கு வழிப்படுத்தினார். அந்த வரிசையில் உதித்தவர் வித்தகம் குரு. அவர் சமயத் தொண்டுடன் சமூகத் தொண்டுகளையும் ஆற்றி வருவதால் மக்களுக்கு இரு வழிகளில் உதவுகிறார் — என்றார்.

சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள், சிவஸ்ரீ வீரபத்திர சிவக்குருக்கள், அருட்திரு. தில்லைநடராசா ஆகியோரும் ஆசியுரை வழங்கினர்.

சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு. செ. சரவணபவன் இந்து இளைஞர் பேரவைத் தலைவர் கெ. தனபாலன், சச்சிதானந்த ஆச்சிரமத்தைச் சேர்ந்த இ. குழந்தை வடிவேலு, மாவை. செ. நவரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர்.

இந் நிகழ்வின் ஆரம்பத்தில் சாவகச்சேரி வாரிவனேஸ்வரம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் விசேடபூசைகள்இடம் பெற்று அருட்திரு பரமசுவாமி சுவாமிகள் ஊர்வலமாக சிவன் கோவிலுக்கு அழைத்து வரப்பட்டார்.

இந்து சமயப் பேரவையின் தலைவர் அருட்கவி சீ. வினாசித்தம்பி, 'திருவருட்சுரபி' என்னும் பட்டத்தை வழங்கி அளித்த வாழ்த்து மடல் இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி. சக்திகிரிவனால் வழங்கப்பட்டது.

ஆலய மண்டபம் அடியார்கள், சமய அபிமானிகளினால் நிறைந்து வழிந்தது. வித்தகம் குருமணி எல்லோருக்கும் ஆசிகூறி வாழ்த்தினார். (அ - 51)

## நாளை

**ஆனி 30**

புதன்கிழமை

திதி: பிரதமை முற்பகல் 7.12 வரை.

துதியை வைகறை 5.40 வரை

நட்சத்திரம்: பூசம்

முன் இரவு: 8.25 வரை

சுபநேரம்: 4.30—6.00

ராகுகாலம்: 12.00—1.30

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

ஒருவர் தம்மைப் புகழ்ந்து பேசும் போது அதற்கு மகிழ்தலாகாது. அதனை உடனேயே தடுத்து விடவேண்டும்.

— [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலர் உணவு நிவாரண வெட்டினால்

# மீளக்குடியமர அனுமதிக்கப்படாது

# 20 ஆயிரம் குடும்பங்களும் பாதிப்பு

வலிமேற்கு, ஜூலை 13

கு_ாநாட்டில் அரசாங்கத்தினால் அமுல் செய்யப்பட உள்ள உலர் உணவு நிவாரண வெட்டினால் பாதிக்கப்பட உள்ள 90 ஆயிரம் குடும்பங்களில் சுமார் 20 ஆயிரம் குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்கப்படாதவை என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் சுமார் 20 ஆயிரம் குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஆனால் இந்த 20 ஆயிரம் குடும்பங்களில் பெரும்பாலான குடும்பங்களுக்குத் தற்போது இடம்பெயர்ந்து இருக்கும் பிரதேச பிரிவுகளில் மீளக் குடியமர்வுக்கான கொடுப்பனவு ரூபா 5 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

அநேகமான குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேலாகியும் உள்ளது.

இந்நிலையில் இந்த இடம் பெயர்ந்த குடும்பங்களும் நிவாரணத்தை இழக்கும் நிலையில் உள்ளன.

இடம்பெயர்ந்து தற்போதும் நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் தங்கியிருக்கும் தங்களுக்குத் தொடர்ந்தும் நிவாரணம் வழங்கப்படவேண்டுமென இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(இ-157)

## திருநெல்வேலிச் சந்தை கட்டடவேலை பூர்த்தி

வலி. கிழக்கு, ஜூலை 13

திருநெல்வேலி பொதுச் சந்தையின் உட்புற சந்தைக் கட்டடம் 35 இலட்சம் ரூபா செலவில் புதிதாக ஐ. நா. அபிவிருத்தித்திட்ட அமைப்பின் நிதி உதவியுடன் கட்டப்பட்டு எதிர்வரும் 15 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபையிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்தச் சந்தையில் மரக்கறிச்சந்தை, மீன் சந்தை, இறைச்சிக்கடைகள் ஆகியவையும் பொது மலசல கூடங்களுமே புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கான வேலைகள் யாவும் முடிவுற்றுள்ளன என்று எதிர்வரும் 15 ஆம் திகதி நல்லூர்பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டு வியாபாரிகள், பொது மக்களின் பாவனைக்கு விடப்படும் என்றும் பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை இரண்டாம் கட்ட கட்டட வேலைகளான வெளிப்புறச் சந்தையில் புதிய கடைகள் கட்டுவதற்கான வேலைகளும் சந்தை மேல்மாடிக் கட்டட வேலைகளும் ஐ. நா. அபிவிருத்தித்திட்ட அமைப்பின் உதவியுடன் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

[இ-180]

## பட்டினிக்கு எதிரான இயக்கக் கண்காட்சி

யாழ்ப்பாணம் ஜூலை, 13

விவசாய விளைபொருள்கள் மற்றும் பழவகைகள் பதனிடுதல் தொடர்பான கண்காட்சி ஒன்று பட்டினிக்கெதிரான இயக்கத்தின் யாழ். அலுவலகத்தில் நடத்தப்பட்டது.

இந்தக் கண்காட்சியில் பழவகைகளில் செய்யப்பட்ட ஜாம், கோடியல். சோஸ் மற்றும் இனிப்பு வகைகள் ஆகியவற்றுடன் மரக்கறி சூப், மரக்கறிவற்றல், குரக்கன் கேக், குரக்கன் பிஸ்கெட் போன்றவையும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

பண்டத்தரிப்பு, இளவாலை, மாதகல், மானிப்பாய் ஆகிய பகுதிகளில் பட்டினிக்கெதிரான நிறுவனம் நடத்திய விவசாய விளை பொருள்கள் பதனிடுதல் தொடர்பான 5 நாள் பயிற்சியில் பங்கு பற்றிய பெண்களின் தயாரிப்பில் உருவான பொருள்களே மேற்படி கண்காட்சியில் வைக்கப்பட்டதாக பட்டினிக் கெதிரான நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ)

## ஆயுர்வேத ஆஸ்பத்திரி

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணம், லங்கா சித்த ஆயுர் வேத மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ஆயுர் வேத வைத்தியசாலை ஒன்று அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

வட இலங்கை சுதேசவைத்திய அவைத் தலைவர் பேராசிரியர், அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பண வைபவத்தில் தலைவருடன், அவையின் செயலர் கலாநிதி என். சண்முகலிங்கம் இணைந்து மங்கள விளக்கேற்ற அவையின் புதிய செயற் குழு உறுப்பினரும், பதில் மாவட்ட நீதிவானுமான க. கேசவன் புதிய வைத்தியசாலையை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

கல்லூரியின் வருகை விரிவுரையாளர், வைத்தியகலாநிதி ஆ. ஞா. வீரசிங்கம் வைத்திய சாலையை நெறிப்படுத்தும் பணியினை மேற்கொண்டுள்ளார்.

கல்வி பயிலும் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கு இந்தவைத்தியசாலை பெரும் உதவியாக அமையும் என கருத்துத் தெரிவிக் ப்பட்டது.

(இ-15)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 13

'உதயன்' நிறுவன ஆதரவுடன் யாழ் மாவட்டக் கரபந்தாட்டச் சங்கம் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தி வரும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 4மணி —கிறாஸ் கொப்பஸ் வி. க. அணி எதிர் அந்தனிஸ் வி க. அணி.

இந்தச் சுற்றுப்போட்டியில் இன்று ஆரம்பமாகும் நான்கு பேர் கொண்ட அணிகளின் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:

★ பிற்பகல் 5 மணி — அந்தனிஸ் வி. க. அணி எதிர் ஈச்சமோட்டை வி க. அணி.

★ பிற்பகல் 5-30 மணி — விநாயகர் வி. க. அணி எதிர் ஞானவைரவர் 'ஏ' வி. க. அணி.

★ பிற்பகல் 6 மணி — அந்தனிஸ் வி. க. அணி எதிர் விநாயகர் வி. க. அணி.

(க)

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் பெண்கள் பிரிவு ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:

★ பிற்பகல் 4.30 மணி — யுத்கார்மல் வி. க. அணி எதிர் யாழ். பல்கலைக்கழக வி. க. அணி.

[க]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 13

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வே. கா. கணபதிப்பிள்ளை தலைமையில் கலாசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் கலந்து கொள்வார்.

(க)

## அன்பளிப்பு

நெல்லியடி ஜூலை 13

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனைக்கு 60 இலட்சம் ரூபா பெறுமதியான குளிர்சாதனப் பெட்டி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

சூரியசக்தி மூலம் இயங்கும் இந்த குளிர்சாதனப் பெட்டியில் தடுப்பு ஊசி மருந்துகள் வைத்துப் பாதுகாக்கப்படுமென மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே மயிலேறும் பெருமாள் தெரிவித்தார்.

(இ-109)

## விடுதி புனரமைப்பு

நெல்லியடி, ஜூலை 13

வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் வன் செயலினால் சேதமடைந்த டாக்டர்கள் தங்கும் விடுதி சுமார் ஏழு இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா தூதரகம் இதற்கான ஒழுங்குகளை மேற் கொண்டுள்ளது.

[இ-109]

## சமூக சேவைகள் உத்தியோகத்தர் சங்கம்

திருகோணமலை, ஜூலை 13

வடக்கு-கிழக்கு மாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்களின் சங்கம் திருகோணமலையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் மேற்படி உத்தியோகத்தர்களுக்கு நடத்திய மூன்று நாள் வதிவிடப் பயிற்சி நெறியின் முடிவில் இந்த சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் உட்பட வடக்கு - கிழக்கின் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் ஒன்று கூடி தமக்கென இந்த சங்கத்தை அமைத்துள்ளனர்,

தலைவராக த. கிருபாகரன் செயலாளராக வே. தபேந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மற்றும் உப தலைவர், உப செயலாளர் உட்பட எட்டு மாவட்டங்களுக்குமான மாவட்ட இணைப்பாளரும் தெரிவு செய்யப்பட்டனர் (இ)

## நாற்று மேடைகளுக்கென 10 ஆயிரம் தேங்காய்கள்

### கொழும்பிலிருந்து தருவிப்பு

தென்மராட்சி. ஜூலை 13

பளை தென்னை அபிவிருத்திச் சபையின் நாற்று மேடைக் கென கொழும்பிலிருந்து கப்பல் மூலம் 10 ஆயிரம் தேங்காய்கள் தருவிக்கப்பட்டுள்ளன.

இவை நாற்றுப் போடப்பட்டு வருட இறுதிக்கு முன் பளை, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களுக்கு வழங்கப்படும்.

கடந்த நான்கு வருடங்களில் இப் பிரதேசங்களில் அழிக்கப்பட்ட தென்னைகளுக்குப் பதிலாக தென்னை புனர் நடுகைத் திட்டத்தின் கீழ் தென்னங் கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

தென்னை புனர் நடுகைத் திட்டத்தின் கீழ் 15 ஆரயிரம் தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளன என்றும்.

அவற்றில் பளை தென்னை அபிவிருத்திச் சபையினால் கடந்த ஆண்டு ஜூலை மாதம் நாற்று மேடைகளில் 5 ஆயிரம்தேங்காய்கள்நடப்பட்டு மீள் நடுகைக்கு தயாரான நிலையில் உள்ளதாகவும் தென்னம் நாற்று மேடைப் பொறுப்பதிகாரில் க. தனிநாயகம் தெரிவிந்தார்.

(இ-117)

## வாசகர் திருமுகம்

## கண்மூடி மௌனம் ஏன்?

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற பெரிய சந்தைகளில் சைக்கிள் பாதுகாப்புப் பணமாக ஒரு ரூபா மட்டுமே பொது மக்களிடமிருந்து அறவிடப்படுகிறது.

ஆனால் இந்த இடங்களில் இருக்கும் சந்தைகளிலும் பார்க்க மிகச் சிறிய சந்தையே மானிப்பாயில் இயங்குகிறது. இதன் பெயர் இறவத்தை சந்தை.

இந்தச் சந்தை காலை 9.30 — 12.30 வரை மூன்று மணித்தியாலங்களே மும்முரமாக இயங்கும். பகல் ஒரு மணிக்கு சந்தை செயல் இழந்து விடும். அப்படி இருந்தும் சைக்கிள் பாதுகாப்புக்கு இரண்டு ரூபா அறவிடப்படுகிறது.

இது நீதி அல்ல. இங்குமக்களுக்குச்சேவை செய்வது என்ற மனப்போக்கு இல்லாமல் பணம் வசூலிக்கும் நோக்கமே மேலோங்கி நிற்கின்றது. என்பது தெரிகிறது. இதைக் கேட்பார்இல்லையா?

மானிப்பாய் பிரதேச சபையும் கண்மூடி மௌனம் சாதிப்பது ஏன்? வறியவர்களுக்கு விமோசனம் இல்லையா?

சுதுமலைக்கு அடுத்து இன்னொரு சிறிய சந்தை இதன் பெயர் சாவற்கட்டு சந்தை. மானிப்பாய் சந்தையிலும் சிறிய சந்தையாக உள்ள இந்தச் சந்தையில் ஒரு ரூபாவே அறவிடுகிறார்கள். நல்ல சேவையும் செய்கிறார்கள். இது பாராட்டுதற் குரியது.

கா. பூபாலபிள்ளை

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

## நியமனம் கிடைக்குமா?

29—06—1999 இல் உதயன் பத்திரிகையில் வெளியான செய்தியில் ''வருட இறுதிக்குள் 2 ஆயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனம்'' என்று கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார். அதுவும் 1996 இல் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்கள் என்ற அடிப்படையில் நியமனம் வழங்கப்பட இருப்பது வரவேற்கத் தக்கது.

1996 இல் நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் என்போன்ற நூற்றுக் கணக்கானவர்கள் கூடுதல் புள்ளிகள் பெற்றும் பிரதேச செயலகப் பிரிவுகள் மாவட்டங்களை மாறிப்பதிந்ததின் காரணமாகவும். வதிவிட அத்தாட்சிப் பத்திரம் இல்லாமையினாலும் புறந்தள்ளப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்கள் இதற்கென யாழ். நகரில் ஒரு சங்கமும் அமைத்து போராடினர். ஆயினும் எமக்கு நீதி கிடைக்கவில்லை.

23-05-1998 இல் உதயன் பத்திரிகையில் வெளியான முந்திய செய்தியில் '1996 ஆம் ஆண்டு இடம் பெற்ற உதவி ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் கூடுதல் புள்ளி பெற்றும், வதிவிடச் சான்றிதழ் இல்லாததால் நியமனம் பெறாதவர்களுக்கு சந்தர்ப்பம். வழங்கப்பட இருக்கிறது. இந்தப் போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களுக்கு தற்சமயம் நியமனம் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களில் கூடுதல் புள்ளிகளைப் பெற்றும் வதிவிடத்தை நிரூபிக்கத் தவறியமைக்காக பலர் வேலை வாய்ப்பை இழந்திருந்தனர். இந்தப் பரீட்சையில் திறமை அடிப்படையில் வெற்றிட எண்ணிக்கையில் 25 சதவீதமானவர்களை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன்பயனாக வதிவிடத்தை நிரூபிக்காமலே இவர்களுக்கு நியமனம் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் இந்த வாய்ப்பின் கீழ் நூறு பேருக்கு நியமனம் கிடைக்குமென கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன'' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

1996 இல் எத்தனையோ கஷ்டம், இடப்பெயர்வுகளுக்கு மத்தியில் இப்பரீட்சையை எழுதிவிட்டார்கள் யாழ். மாவட்ட பரீட்சார்த்திகள். திறமையின் அடிப்படையில் எங்களுக்கு நியமனம் கிடைக்க யாழ். மாவட்ட எம். பியும் ஈ.பி.டி பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா இவற்றைக் கவனத்தில் எடுத்து பாதிக்கப்பட்ட என் போன்ற கூடுதல் புள்ளிகள் பெற்றும் நியமனம் கிடைக்கத் தவறியவர்களுக்கு வழி வகுத்துத் தருமாறு வேண்டுகின்றேன்.

எஸ். தர்சினி

சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா துணை – தெல்லிப்பழை

## நரசிங்க வயிரவர் கோயில்
## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

மேற்படி கோயிலில் எழுந்தருளியிருக்கும் வயிரவப் பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நிகழவுள்ளது. அடியார்கள் பங்குகொண்டு அருளைப் பெறுவார்களாக.

### நிகழ்வுகள்

14-7-99 புதன்கிழமை மாலை
பூர்வாங்கக் கிரியைகள் இடம்பெறும்.
15-7-99 வியாழக்கிழமை
காலை 9, 00 மணிக்கும் 10, 00 மணிக்கும் இடையில் உள்ள சுபவேளையில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

சிவஸ்ரீ சி. கணேசலிங்கக்குருக்கள்
பிரதமசிவாச்சாரியார்
(67400)

ஓம்
ஸ்ரீ கணபதி துணை

## உப நயன விஞ்ஞாபனம்

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ பிரம்மாதி வருஷம் ஆனி மாதம் 30 ஆம் நாள் 14-07-1999 புதன்கிழமை காலை 7.12 மணி முதல் 8.48 மணி வரை வரும் கடக லக்கின சுபமுகூர்த்தத்தில்

பிரம்மஸ்ரீ இ. தேவபாலசர்மா அவர்களின் குமாரர்கள்
**செல்வன் சிரஞ்சீவி ரூபகண்ணா சர்மா**
**செல்வன் சிரஞ்சீவி பிரசன்ன சர்மா**

ஆகிய இருவருக்கும் யக்னோப விததாரண பிரம்மோபதேசம் செய்யக் கல்வயல் பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகருடைய திருவருளும் குருவருளும் முன்னிட்டு ஆலய மண்டபத்தில் நிகழவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

விழா சிறப்புற ஆசி வழங்கும் சிவாச்சாரியார்கள்:

'வேதாகம சோதிட பூஷணம்'
சிவஸ்ரீ சி, சிதம்பரநாதக் குருக்கள்
(மட்டுவில் திருக்கணித பஞ்சாங்கம்)

வேதாகம பாஸ்கரர்
சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் (ஜே. பி.)
(இணுவில் காயத்திரி பீடம்)

சிவாகம கிரியா சிரோன்மணி
சிவப் பிரம்மஸ்ரீ ச. சோமஸ்கந்தக் குருக்கள்
(மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி கோயில், கல்வயல் அம்பலவாண வீரகத்தி விநாயகராலய பிரதம குரு)

உபநயன குரு: வேதாகமஜோதி, மட்டுவில்
சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
இ. தேவபாலசர்மா - கல்யாணி தம்பதிகள்
அம்பலவாண வீரகத்தி விநாயகர் கோயில்,
கல்வயல், பெருங்குளம், சாவகச்சேரி. (37405)

## ஆத்மார்த்த அஞ்சலி

மஞ்சவனப்பதி முருகன் ஆலய
முன்னாள் நிர்வாக சபைத் தலைவரான
வைத்திய கலாநிதி
**இராஜரட்ணம் அருட்பிரகாசம்**
அவர்கள் கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஆத்மா மஞ்சவனப்பதிமுருகன் திருவடிகளை அடைந்து சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஆலயத்தொண்டில்

த. கணேசபிள்ளை
தலைவர்

இ. இராசலிங்கம்
செயலாளர்

நிர்வாக சபை
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன்ஆலயம்.
[67407]

## கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்

உடுவில் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபரும்
எமது இல்லத்தின் தலைவருமாக இருந்து
அளப்பரிய சேவையாற்றிய
பெரும் மதிப்புக்குரிய ஆசிரியர்
**திருமதி சரஸ்வதி சோமசுந்தரம்**
அவர்களின் மறைவையொட்டி எமது இல்லக் குடும்பத்தினர் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் வாழ்ந்த வாழ்க்கைக்காகவும் அவர் எமது இல்லத்திற்கு செய்த உன்னத சமூக சேவைக்காகவும் ஆண்டவருக்கு நன்றிகளை ஏறெடுக்கின்றோம்.

— மாணவர்கள்,
இல்லக் காப்பாளர்கள்.

''அருளகம்''
பெண்கள் இல்லம்,
மருதனார்மடம். (67402)

# நல்லூர், கல்வியங்காடு பகுதிகளில்
# பல வீதிகள் திருத்தப்படவில்லை

வலி. கிழக்கு: ஜூலை 13

நல்லூர், கல்வியங்காடு, இருபாலை பகுதிகளில் உள்ள பல வீதிகள் திருத்தப்படவில்லை. மழைகாலம் நெருங்குவதால் இவ்வீதிகளில் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர் சட்டநாதர் வீதியின் ஒருபகுதி, நல்லூர்வடக்கு கலைமகள் வீதி, கல்வியங்காடு வட்டக்குளம் சரஸ்வதி சனசமூக நிலையவீதி என்பனவே குன்றும் குழியுமாகவும் புழுதி பரவிய நிலையிலும் உள்ளன.

இருபாலை கற்பகப்பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக உள்ள விதானையார் வீதி, வி. எச். வீதி என்பனவும் சேதமடைந்துள்ளன. அப்பகுதியில் மிதிவெடிகள் இருப்பதாகவும் அஞ்சப்படுகிறது.

இதனால் இப்பகுதி மக்கள் போக்குவரத்தில் பெருங் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

(ஐ-180)


**நாகம்ஸ்**
**சுன்னாகம்**
கவர்ச்சித் தென்றல்
பிரசாந்
உலக அழகி
ஐஸ்வர்யா
நாசர் நடித்த
**ஜீன்ஸ்**
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
[ புதிய நேரம் ]
[67341]

**ராஜா**
**யாழ்ப்பாணம்**
இன்று
ரஜனி - குஷ்பு
மற்றும் பலர் நடித்த
**அண்ணாமலை**
10-30, 2-30,
[சி/8115]


யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை
**கலை, வர்த்தக முகாமைத்துவ பீட**
**மீள் பரீட்சைகள்**
**ஆங்கிலம்**
(இரண்டாம் மொழி)
**1997**

மேற்படி மீள் பரீட்சைகள் கீழ்வரும் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்திலும் நடைபெறவுள்ளன. இந்த அறிவித்தலை மாணவர்கள் கவனத்திற் கொண்டு பரீட்சைக்குத் தோற்றும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முதலாம் ஆண்டு மீள் பரீட்சை ஆங்கிலம் இரண்டாம் மொழி பகுதி I — 04-08-99

இரண்டாம் ஆண்டு மீள் பரீட்சை ஆங்கிலம் இரண்டாம் மொழி பகுதி II — 02-08-99

மூன்றாம் ஆண்டு மீள் பரீட்சை ஆங்கிலம் இரண்டாம் மொழி பகுதி III — 03-08-99

— பதிவாளர்.
[சி/8163]

யாழ். குடாநாட்டில்

## முகாம்களில்வசிப்போருக்கு தற்காலிக வசிப்பிடங்கள்

### யாழ். செயலகம் நடவடிக்கை

வலி. மேற்கு, ஜூலை 13

யாழ். குடாநாட்டில் தமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கப்படாமல்நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருப்பவர்களுக்கும் தற்காலிக வதிவிடம் அமைத்துக் கொடுப்பதற்கு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

மாதமொன்றுக்கு ஆயிரத்து 500 ரூபாவுக்குட்பட்ட வருமானத்தையுடைய குடும்பங்களுக்கே நிரந்தர வதிவிடம் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இந்த வதிவிடங்களை அமைத்துக் கொடுப்பதற்குரிய நிதியினை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், யுனிசெவ் நிறுவனம் ஆகியன வழங்கவுள்ளன.

சகலபிரதேச செயலகங்களுக்கும் இது தொடர்பான சுற்றறிக்கையொன்றை யாழ். மாவட்ட செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் அனுப்பி வைத்துள்ளனர். (ஐ-175)

## பட்டப்படிப்பு பீடம் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். பல்கலைக்கழக பட்டப்படிப்பு பீடம் நாளை புதன்கிழமை முதல் தனியான கட்டடத்தில் இயங்க உள்ளது.

தற்சமயம் இந்தப் பீடத்தின் அலுவலகம் யாழ். பல்கலைக்கழகத்தின் ஓர் அறையில் இயங்கி வருகிறது. நாளை முதல் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக குமாரசாமி வீதியில் உள்ள தனியான ஒரு கட்டடத்தில் அது செயற்பட உள்ளது.

புதிய இடத்தில் பணிகளை ஆரம்பிக்கும் வைபவம் நாளை காலை 10-00 மணிக்கு நடைபெறும். [ஐ]

## அமிர், யோகேஸ் நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களான அமரர்கள் அ. அமிர்தலிங்கம், வெ. யோகேஸ்வரன் ஆகியோரின் 10 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். அதனை ஒட்டி தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்திலும் கொழும்பு அலுவலகத்திலும் இன்று காலை 9 மணிக்கு அமரர்களின் உருவப்படங்களுக்கு அஞ்சலி செலுத்தும் வைபவங்கள் நடைபெற இருப்பதாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## பெற்றோல் நிலையத்தில் விபத்து

நெல்லியடி, ஜூலை 13

எரிபொருள் நிரப்பு நிலைய மீற்றர் அளவை மானியுடன் உழவு இயந்திரம் ஒன்று மோதியதனால் அந்த அளவைமானி முறிந்து நிலத்தில் வீழ்ந்தது.

இச்சம்பவம் நேற்றுப் பகல் 12 மணியளவில் கல்வியங்காட்டிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம் பெற்றது.

நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான உழவு இயந்திரமே, மீற்றர் அளவைமானியுடன் மோதியுள்ளது. இது குறித்து இராணுவத்தினர் விசாரணைகளை மேற்கொண்டனர். (இ-109)

## வாய்க்கால் புனரமைப்பு

வலி. கிழக்கு, ஜூலை 13

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கொக்குவில் நந்தாங்குள வாய்க்கால் 5 லட்சம் ரூபா செலவில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நுண் கருத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் அங்கீகாரத்துடன் இந்த வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் — இதற்கான வாய்க்காலை துப்புரவு செய்து கொடுக்கும் பணியில் பிரதேச சபை ஈடுபட்டு வருவதாகவும் பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-180)

## பாராட்டு விழா

குருநகர், ஜூலை 13

யாழ் புனித மரியாள் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமை புரிந்து தமது 60 ஆவது வயதில் இம்மாதம் 4 ஆம் திகதி இளைப்பாறியுள்ள சிங்கராயர் தார்சீசியஸின் சேவைநலன்பாராட்டு விழாவும் மணி விழாவும் நாளை புதன்கிழமை மு. ப. 9.30 மணிக்கு யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் நடைபெற உள்ளன.


**எமது புதிய வெளியீடுகள்**

() அவளா ஆவியா
() எங்கிட்ட மோதாதே
() நமக்குள் இருக்கட்டும்
() பொம்பளைங்க சமாச்சாரம்

மற்றும்
புதிய போஸ்ரர்களும் விற்பனைக்குண்டு.

**பிள்ளையார் வீடியோ**
23, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(67408)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர்கள் ஆற்றிய தொண்டுக்கே கலாபூஷணம் விருது கிடைத்துள்ளது

## பாராட்டுவிழாவில் மகிழ்ச்சி தெரிவிப்பு

நல்லூர், ஜூலை 13

இந்தக் கலைஞர்கள் நால்வரும் தம்மிடம் உள்ள கலைத் திறன்களை ஏனையவர்களுக்கும் அளித்து எமது மண்ணில் கலையை வளர்த்தனர். வளர்க்கின்றனர். அவர்கள் சமூகத்துக்கு ஆற்றிய கலைத் தொண்டுகளுக்காகவே கலாபூஷணம் விருது கிடைத்துள்ளது. அவர்களுக்குக்கிடைத்த விருது கலைக்குக் கிடைத்த விருதாக, எமக்குக்கிடைத்த விருதாக, எமக்குக் கிடைத்த பெருமையாக மகிழ்கின்றோம்.

இவ்வாறு யாழ். இலக்கிய வட்டம் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்திய கலாபூஷணம் விருது பெற்ற கலைஞர்களுக்கான பாராட்டு விழாவில் பேசிய துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெரிவித்தார்.

யாழ். இலக்கிய வட்டத் தலைவர் கலாநிதி க. குணராசா தலைமையில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் பிரஸ்தாப பாராட்டு விழா கடந்த மாத இறுதியில் நடைபெற்றது.

விழாவில் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் பேசும்போது கூறியதாவது:-

இங்கே பாராட்டுப்பெறும் நான்கு கலைஞர்களும் தத்தமது கலைச்சேவையின் ஊடாக எமது பாரம்பரிய கலைகளைப் பேணி வளர்த்துள்ளனர். துர்க்காதேவி தேவஸ்தானத்திலும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலிலும் இந்தக் கலைஞர்கள் தமது திறமையை வெளிப்படுத்தியதுடன் தமது வசமுள்ள கலைகளை ஏனையவர்களுக்கும் கற்பித்து கலை வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினர்.

கலைப் பேரரசு பொன்னுத்துரை, நாதஸ்வர இசைமணி ஞானசுந்தரம், இசைக் கலைஞர் செல்லத்துரை, சங்கீதபூஷணம் திலகநாயகம் போல் ஆகிய நான்கு கலைஞர்களுக்கும் கிடைத்த கலாபூஷணம் விருது எமக்குக் கிடைத்த விருதாக எண்ணி மகிழ்கின்றோம்.

இந்தக் கலைஞர்கள் நால்வரையும்பாராட்டும் வாய்ப்பு கிடைத்ததில் யாழ். இலக்கிய வட்டத்துடன் இணைந்து எமது துர்க்காதேவி தேவஸ்தானமும் மகிழ்ச்சியடைகின்றது.

கலாபூஷணம் விருது அறுபது வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களுக்கும் வயதில் குறைந்தவராக இருப்பின் அவர் சார்ந்த துறையில் விற்பனராக இருந்தாலும் கிடைக்கும் இந்தக் கலைஞர்களைச் சமூகம் பாராட்டுவதன் மூலம் ஏனையோருக்கும் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டுவதாக அமையும்.

கலாபூஷணம் நால்வரையும் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கும் தகுதி பிறவிக் கலைஞர் வீரமணி ஐயாவுக்கே உண்டு என்பதால் எமது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அவருக்கும் நன்றி கூறுகிறோம். — என்றார் யாழ். இலக்கியவட்டச் செயலாளர் எஸ். இராஜகோபால் (செம்பியன் செல்வன்) பேசும் போது கூறியதாவது:

சிறந்த கலைஞர்கள் நால்வருக்கும் அரசு சரியான முகவரியை வழங்கியுள்ளது. இன்று வரை யாழ்ப்பாணத்தில் யாழ். பாடியின் முகவரி மட்டுமே இருந்தது. எங்களில் பலர் முகவரியை இழந்து கொண்டிருக்கிறோம்.

கலாபூஷணம் விருது அங்கீகாரம் தமிழர்களுக்கு முக்கியம். யாழ்ப்பாணத்தான் எதையும் ஏற்கமாட்டான் ஏற்றுவிட்டால் சம்பந்தப்பட்டதற்கு உயர்ந்த நிலைதான். யாழ்ப்பாணக் கலைஞர்களை ஏற்று அங்கீகரித்துக் கொள்வது மகிழ்ச்சியானது — என்றார்.

கலாபூஷணம் விருது பெற்ற கலைஞர்கள்ஏ.ரி. பொன்னுத்துரை எஸ். ஆர். ஞானசுந்தரம், வ. செல்லத்துரை, திலகநாயகம் போல் ஆகியோர் கலைக்காற்றிய பணிகள் குறித்து முறையே நவாலியூர் செல்லத்துரை, சிவஸ்ரீ சோமாஸ்கந்த சர்மா, எஸ் சந்திரசேகரம், 'சிற்பி' சரவணபவன் ஆகியோர் பேசினார்கள்.

கலைஞர்கள் பதிலுரை வழங்கினார்கள்.

மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் கலைஞர்களுக்குபொன்னாடைபோர்த்துக் கௌரவித்து வாழ்த்துப்பா வழங்கினார். அதைத் தொடர்ந்து அன்பர்களும் ஆதரவாளர்களும் மலர் மாலை சூடிக் கௌரவித்தனர்.

கலாபூஷணம் திலகநாயகம் போலின் இசைக் கச்சேரியும் இடம்பெற்றது. (அ-103)


## படிவம்

விஞ்ஞான, வணிக
ஆசிரியர்களைத்
தேசிய பாடசாலைகளுக்கு
ஆட்சேர்ப்பதற்கான
விண்ணப்பப்படிவம்
15-07-99 அன்று
விற்பனைக்கு வருகின்றது.
பிரதி ஒன்று ரூபா 5.00
விண்ணப்ப முடிவு திகதி
1999-07-30

**பாரதி பதிப்பகம்**
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No. 3081 (சி/8167)


### வவுணதீவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

இப்பகுதிகளில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்கள் மற்றும் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மட்டக்களப்பு பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்தன. [ஐ-9]

### முகமூடி...

(முதலாம் பக்கத் தொடர்)

வேளை வீட்டில் தனித்திருந்த அந்தப் பெண்ணை அவர்கள் சுட்டுக்கொன்றதாகவும் —

கூறப்படுகிறது.

பெண்ணின் சடலத்தில் 17 இடங்களில் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

மன்னார் நீதிவான் எஸ். இளஞ்செழியன் சம்பவம் நடந்த வீட்டிற்குச் சென்று விசாரணை நடத்தினார்.

சடலத்தை பிரேத பரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டார்.

பின்னர் மன்னார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட சடலம் பிரேத பரிசோதனையின் பின்பு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கோரமாகச் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்னர் இந்தப் பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படுவதாக மன்னார் ஆஸ்பத்திரி சட்ட மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரேத பரிசோதனை அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்ட பெண் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலகியவர் என்றும் —

அண்மைய நாள்களில் படையினரால் அவர் தொடர்ந்து முகாமுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்ததாகவும் —

கூறப்பட்டது. (ஐ-21-164)


மங்களகரமான சகல வைபவங்களுக்கும் ஏற்ற
**பொருள்கள் வாடகைக்குக் கொடுக்குமிடம்**

**உதயம்**

பீங்கான், மாபிள் பீங்கான், ரம்லர், கிளாஸ் வகைகள், நிறைகுடம் செற், ஐஸ்கிறீம் கப்ஸ் குத்துவிளக்கு, பந்திப் பாய்கள், பிளாஸ்ரிக் பாய்கள், பிளாஸ்ரிக் வாளிகள், தண்ணீர் பரல், கறி வாளிகள், அனைத்துச் சமையல் பாத்திரங்களும் சிங்கப்பூர் சோடினைகளும் பிளாஸ்ரிக் மாலை அத்துடன் பிளாஸ்ரிக் கதிரைகள், குசன் கதிரைகள், இரும்புக் கதிரைகள், மடிப்புக் குசன் கதிரைகள், மணவறை, பந்தல், வெல்கம் தட்டிகள், திருமண கார் (குளிரூட்டப்பட்ட)

அத்துடன்
வெளிநாட்டு, உள்நாட்டு தொலைத்தொடர்புகள்
பக்ஸ் வசதிகள்
உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.

இங்கிருந்து
அழைக்கும் உள்ளூர் அழைப்புகளுக்கு நிமிடத்துக்கு ரூபா 6.00
வரும் எந்த அழைத்தலுக்கும் நிமிடம் ரூபா 2.00

**உதயம்**
172, பிரதான வீதி, மக்கள் வங்கி அருகில், யாழ்ப்பாணம்.
தொலைபேசியில் வரும் செய்திகளும் உடனுக்குடன் அவரவர் இல்லங்களுக்கு அறிவிக்கப்படும்.
(67397)


## கலந்துரையாடல்

வடமராட்சி, ஜூலை 13

பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சிறுவர் உரிமைகள்பற்றிய கலந்துரையாடல் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிகிழமை பருத்தித்துறை ஆத்தியடியில் உள்ள போரூட் நல்லொழுக்க நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார்.

(ஐ-173)

## பாடசாலை பஸ் சேவை

வடமராட்சி, ஜூலை 13

தொண்டமானாற்றிலிருந்து, உடுப்பிட்டி, நவிண்டில், இரும்புமதவடி, வதிரி, திக்கம், வியாபாரிமூலை, நாவலடிச் சந்தி ஊடாக பருத்தித்துறைக்கு பாடசாலை பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ இந்தச் சேவையை ஆரம்பித்துள்ளது. (இ-173)

### மானிப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஏற்படவில்லை. பிரதேச சபை நூலகத்தின் ஓடுகள் சில சேதமடைந்தன.

இச் சம்பவத்தை அடுத்து அங்கு சென்ற படையினர் அப்பகுதியில் காணப்பட்ட பொதுமக்களை விசாரணை செய்தனர். (ஐ-90-15-6)

### வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்)

பகுதிக்குச் செல்லும் லொறிகளுக்கு ஏற்றுவதற்கு வசதியாக இப்பகுதியில் யுத்த சூனியப் பிரதேசம் ஒன்று பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோரியிருந்தனர்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் சில யோசனைகள் இராணுவத்தின் வன்னித் தலைமைப் பீடம் முன்வைத்துள்ளது.

அதன்படி —

படையினரின் கடைசிச் சோதனைத் தடை நிலையம் கண்டி வீதியில் 145 ஆம் கட்டையில் அமைக்கப்படும். புலிகளின் சோதனைத் தடை நிலையம் 140 ஆம் கட்டையில் இருக்க வேண்டும். இரண்டுக்கும் இடைப்பட்ட கண்டி வீதியின் ஐந்து கிலோ மீற்றர் தூரத்துக்கும் இரு மருங்கிலும் தலா அரைக்கிலோ மீற்றர் அகன்ற (அதாவது மொத்தம் ஒரு கிலோ மீற்றர் அகன்ற) பிரதேசம் யுத்த சூனியப் பிரதேசமாக அறிவிக்கப்பட வேண்டும். இந்த ஐந்து சதுரக் கிலோ மீற்றர் பிரதேசத்துக்குள் புலிகளோ, படையினரோ நடமாடக் கூடாது.

—இவ்வாறு வன்னி இராணுவத் தலைமைப்பீடம் தெரிவித்த யோசனைகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் விடுதலைப் புலிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் —

இது விடயத்தில் அவர்களின் பதில் எதிர்பார்க்கப்படுவதாகவும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-ஐ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்குமான மூன்று நாள் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் வியாழக்கிழமை வரை நல்லாயன் நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-9)

## மாணிக்கவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாண சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அனுசரணையுடன் மாணிக்கவாசகர் குருபூசை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. (ஐ-3

## கப்பலில் வெங்காயம்

வடமராட்சி, ஜூலை 13

மற்றொரு தொகுதி புகையிலை, வெங்காயம், கருவாடு, பனம்பொருள்கள் என்பன தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்காகப் பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து கப்பலில் ஏற்றப்பட்டுவருகின்றன.

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கி முடித்த 'இந்துருவள' என்ற கப்பலில் இந்தப் பொருள்களான குடாநாட்டு விளை பொருள்கள் ஏற்றப்பட்டு வருகின்றன.

இரண்டொரு நாள்களில் கப்பல் இப் பொருள்களுடன் இங்கிருந்து புறப்படும்.

## அதிபர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் அமைந்துள்ள ஜி.சீ.ஈ சாதாரண தர வகுப்புகளைக் கொண்ட அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-9)

### பாதை...

(முதலாம் பக்கத் தொடர்)

நிறைவேற்ற முடியாமலும் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் வவுனியா மேலதிக அரச அதிபர் எஸ். ரகுநாதபிள்ளையிடம் முறையிட்டனர்.

காலை 9 மணிக்கு ஆரம்பமான ஆர்ப்பாட்டம் நண்பகல் 12 மணிவரை நடைபெற்றது. நண்பகல் அளவில் படை அதிகாரி ஒருவர் அங்கு வருகை தந்து பயணிகளுடன் உரையாடினார்.

பாதை ஒன்றைத் திறப்பதற்கான யோசனைகள் விடுதலைப் புலிகளிடம் அனுப்பப்பட்டுள்ளன என்றும் அவர்களின் பதில்கிடைத்ததும் பாதையைத் திறந்து அனைவரையும் சொந்த இடங்களுக்கு அனுப்ப உடன் ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் உறுதி அளித்ததை அடுத்து பயணிகள் தமது ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர். (ஐ-9-164-21)

## ரமோனா...

(முதலாம் பக்கத் தொடர்)

நிலையில் உள்ளதா என்பதைப் பரிசோதித்து சான்றிதழ் சமர்ப்பிக்குமாறு மன்னார் அரச அதிபர் உத்தரவிட்டதை அடுத்தே கப்பல்பொறியியலாளர்கள் படகை பரிசோதிக்க உள்ளனர்.

உயிர்காப்பு வசதியும் மற்றும் மலசலகூட வசதி உட்பட அத்தியாவசிய அடிப்படை வசதிகள் அந்தப் படகில் உள்ளனவா என்பதை பரிசோதிக்குமாறு அரச அதிபர் பணித்துள்ளார்.

இந்தப் பயணிகள் படகு கடந்த சில தினங்களாக இயக்கி வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது. விரைவில் பயணிகள் சேவையில் அது ஈடுபடுத்தப்பட உள்ளது (ஐ-9-164)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13 - 07 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org